In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்பகரத்தூர் காளிக்கு அருச்சனைப் பூக்கள் நூற்றியெட்டு

பாவலர் **பொன். பசுபதி,** புதுச்சேரி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்பகரத்தூர் காளிக்கு
அருச்சனைப் பூக்கள் நூற்றியெட்டு

நல்வாழ்த்துடன்.
பொன். பசுபதி

இயற்றியவர்

புதுவை பாவலர் **பொன். பசுபதி**

(இத்துடன் ஆசிரியர் யாத்த வேறு சில அம்மன் /முருகன் பாடல்கள் இணைக்கப்பட்டுள்ளன)

வெளியீடு :

சுந்தராம்பாள் பதிப்பகம்

எண். 7, சத்தியாநகர் (மேற்கு), காமராசர் சாலை
புதுச்சேரி - 605 013.
தொலைபேசி : 0413 - 2248147

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூல் விளக்கம்

தலைப்பு	:	அம்பகரத்தூர் காளிக்கு அருச்சனைப் பூக்கள் நூற்றியெட்டு
ஆசிரியர்	:	பாவலர் பொன். பசுபதி 7, சத்தியா நகர் (மேற்கு), புதுச்சேரி - 605 013. தொ. பே. 0413-2248147 அ.பே. 9500609361
பதிப்பு	:	முதற் பதிப்பு - செப்டம்பர் 2010
பக்கம்	:	60
தாள்	:	பலாப்பூர் 13.7
அளவு	:	1/8
புள்ளி	:	12
அச்சிட்ட படிகள்	:	1500
வெளியீடு	:	சுந்தராம்பாள் பதிப்பகம், 7, சத்தியா நகர் (மேற்கு), புதுச்சேரி - 605 013. அ.பே. 9500609361
உரிமை	:	ஆசிரியர்க்கே
அச்சிட்டோர்	:	அகத்தியர் அச்சகம், புதுச்சேரி - 605 013. பேசி : 0413 - 2242396, 4206591
விலை	:	உரூ. 45/-

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இறை வணக்கம்

சித்தர்கள் தேர்ந்துறைந்த சீர்புதுவை நற்பதியில்
உற்றோன் விநாயகா உன்றனடி - பற்றினேன்
மற்றுமொரு நூற்படைக்க வந்தித்தேன் நின்னையே
நற்றமிழை என்நாவில் நாட்டு.

தமிழ்த்தாய் வாழ்த்து

மூத்தவளே நாளும் முகிழ்பவளே தாய்த்தமிழே
சீர்த்தமிழே நற்றமிழே செங்கரும்பே - ஏத்தியுனைச்
செம்மொழி என்றே தெரிந்தெடுத்தார் உன்மொழிக்(கு)
எம்மொழியும் ஈடோ இயம்பு!

ஊனில் உயிரில் உறைந்த தமிழ்த்தாயே
தேனின் இனியநற் றெள்ளமுதே - வானினும்
ஓங்கி உயர்கின்ற ஒண்டமிழே என்றனைத்
தாங்கித் தமிழ்வளம் தா!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்நூலாசிரியர் "அருள்முருகும் அம்பிகையும்" என்னும் தமது முதல் நூலைப் புலவர் திரு. அருணகிரியார் தலைமையில் 16-12-1990இல் வெளியிட்டார். அன்று நடைபெற்ற வெளியீட்டு விழாவின்போது ஆசிரியர், தலைவருக்கு மரியாதை செய்யும் காட்சி.

இந்நூலாசிரியர் "எண்ணங்கள் தீட்டிய வண்ணங்கள்" என்னும் தமது இரண்டாம் நூலைத் தமிழ்க்கடல் தி.வே. கோபாலையர் தலைமையில் 3.9.1999இல் வெளியிட்டார். அன்று நடைபெற்ற வெளியீட்டு விழாவின் போது ஆசிரியர், தலைவருக்கு மரியாதை செய்யும் காட்சி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்நூலாசிரியர் **"பண்ணையில் விளைந்த பயிர்கள்"** என்னும் தமது மூன்றாம் நூலை இலக்கணச் சுடர் முத்தமிழ்ப் புலவர் இரா. திருமுருகனார் தலைமையில் 15-08-2005இல் வெளியிட்டார் அன்று நடைபெற்ற வெளியீட்டு விழாவின் போது ஆசிரியர், தலைவருக்கு மரியாதை செய்யும் காட்சி.

"பண்ணையில் விளைந்த பயிர்கள்" என்னும் நூலை மருத்துவர் K.R. சேதுராமன் வெளியிட தொழிலதிபர் திருமதி. சத்தியவதி கமலசேகரன் (சென்னை) முதல் படியை வாங்கிச் சிறப்பு செய்யும் காட்சி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"பண்ணையில் விளைந்த பயிர்கள்" நூல் வெளியீட்டு விழாவின்போது அந்தாதிச் செல்வர் கலைமாமணி புலவர் அரங்க. நடராசனார் ஆசிரியரைப் பாராட்டி வாழ்த்து நல்கிய காட்சி.

இந்நூலாசிரியர் **"உள்ளத்தில் ஊறும் உணர்வுகள்"** என்னும் தமது நான்காம் நூலைக் கலைமாமணி புலவர் அரிமதி தென்னகனார் தலைமையில் 26-07-2008இல் வெளியிட்டார் அன்று நடைபெற்ற வெளியீட்டு விழாவின்போது ஆசிரியர், தலைவருக்கு மரியாதை செய்யும் காட்சி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

27-07-2008 அன்று நடைபெற்ற **"உள்ளத்தில் ஊறும் உணர்வுகள்"** என்னும் நூல் வெளியீட்டு விழாவில், புதுவை பாவலர் பொன். சிவராசன் ஆசிரியருக்கு பொன்னாடை போர்த்திப் பாராட்டும் காட்சி.

"உள்ளத்தில் ஊறும் உணர்வுகள்" நூல் வெளியீட்டு விழாவின்போது நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் பங்கேற்ற ஆசிரியரின் பெயரப் பிள்ளைகள் : பின் வரிசை (இடமிருந்து வலம்) இர. இரகுநந்தன், மு. தாரணி, இர. இராம்மௌரியா, இர. அசெய்ஆதித்தியா. முன்வரிசை : இர. இராகுல் பிரசாத், மு. அசுவின்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேற்குறித்த விழாவின் இசை நிகழ்ச்சியில் பங்கேற்ற செல்வன் இர. இராம்மௌரியா, செல்வி மு. தாரணி.

மேற்குறித்த விழாவில் தலைவர் இரா. திருமுருகனார் செல்வி தாரணியைப் பாராட்டுதல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அணிந்துரை

இதோ ஒரு சுத்தானந்தர் :

புதுவைப் பாவலர் பொன். பசுபதி அவர்கள், அம்பகரத்தூர் காளி அம்மனைப் பற்றி யாத்துள்ள கண்ணிப் பனுவல் நூற்றெட்டையும் படித்து மகிழ்ந்தேன். எங்கெங்கு காணினும் சக்தியடா என்று பாடிய முதலடியாலே பாவேந்தர் உலகம் வியக்கப் போற்றும்மாக் கவிஞரானார்.

சக்தியையே தனது முழுமூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர் பாரதியார். சக்திதாசன் என்று தனக்குப் பெயர் சூட்டிக்கொண்டு பாடியவர். மாக்கவிஞர் காளிதாசனும் சக்தியருள் பெற்றதற்க்காக கவிதைகளைப் பாடியளித்தார். சக்கரவர்த்தி கம்பரும் வயிரபுரம் மாகாளியின் அருளைப் பெற்றுத்தான் இராம காவியத்தைப் பாடியருளினார், இவை உலகறிந்த உண்மை.

நம் காலத்தில் வாழ்ந்து மறைந்த சுத்தானந்த பாரதியாரோ, சக்தி காவியம் என்னும் மாகாவியத்தை ஆயிரக்கணக்கான பாடல்களைப் பாடி சக்திக்கு மலரா பரணம் சூட்டி மகிழ்ந்தார். பாரத மாதாவை மையமாகக் கொண்டு பாடிய பாடல்களை இன்றெல்லாம் படித்து மகிழலாம்.

அத்தகைய பெரியோர்களைப் போன்றே தன் குலதெய்வமாம் அம்பகரத்தூர் காளியைப் பற்றிப் பாடியுள்ளது பாராட்டுக்குரியது. அதனால்தான் ஆசிரியர் பசுபதி அவர்களை சுத்தானந்தரோடு ஒப்பிட்டுள்ளேன்.

முன்னர் மலர்ந்த மலர்கள் :

அருள் முருகும் அம்பிகையும் என்ற நூலுள் முருகனையும், அம்பிகையையும் போற்றிப் பாடிய பாடல்கள் முற்றிலும் இசையில் நனைந்து பாடப் பெற்றவை. இசைப்பயிலும் சுவை பயக்கின்றன.

எண்ணங்கள் தீட்டிய வண்ணங்கள் என்ற நூலில் பல கடவுளர் பற்றிய பாடல்கள் அமைந்துள்ளன. படித்தேன் சுவைத்தேன். அத்தனையும் தேனாய் இனிக்கும் பாடல்கள். இடையிடையே தன்னிலை விளக்கமாகச் சில பாடல்களின் தம் எண்ணத்தை உணர்ச்சியைக் கொட்டிவைத்துள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இத்தனை காலம் என்ன செய்தேன் - வெறும்
பித்தனைப் போல வாழ்ந்து விட்டேன்

எனத் தொடங்கும் பாடல், அம்மா தலைப்பில் அமைந்த பாடல் படிக்க உள்ளம் உருகுகின்றது.

உள்ளத்துள் ஊறும் உணர்வுகள் என்ற நூலுள் தொண்ணூற்று மூன்று தலைப்புகளில் பாடல்கள் வளர்ந்துள்ளன. இவையாவும் வெறும் பாடல்கள் மட்டுமல்ல. உள்ளத்தில் தோன்றிய உணர்ச்சிப் பிழம்புகள். பல ஆண்டுகள் சேர்த்துவைத்த பொக்கிஷங்கள் என்றே கூறலாம்.

"பெண் துரோகி" என்ற தலைப்பில் அமைந்த எழுபத்தாறு பாடல்களும் நெஞ்சை அள்ளும் சுவை, துள்ளும், உறவுக்கும் பாடல்கள், உணர்வுக்குப் பாடல்கள், கடவுளர்கட்குப் பாடல்கள். இவற்றை வரிசையாகப் படித்தால் புலவர் பசுபதி அவர்கள் மனிதாம் சத்துடன் தெய்வாம்சமும் கலந்த கலவைப் புலவர் இவர் என்று சொல்லத் தோன்றுகிறது.

'பண்ணையில் விளைந்த பயிர்கள்' - ஆகா! எத்தனை விதமான பயிர்கள்! அவைகள் கொடுத்த மலர்கள் மணிகள், காய்கள் பழங்கள் என்று பிரித்துப் பார்த்து படித்து மகிழலாம். சிந்தனையத் தூண்டி நாமும் இவர் போன்று கவி புனையலாமே என்று எண்ணம் வளர்கின்றது. ஆனால் எழுதும் போது தானே தோன்றும் இடர்ப்பாடுகள். உலகை பல்வேறு கோணங்களில் கண்டுணர்ந்தவர் அதனால் இவரை உயர் எண்ணங்கள் மலரும் சோலை' என்று பாராட்டத் தோன்றுகின்றது.

இனி அம்பகரத்தூருக்குச் செல்வோம், அங்கு மக்களுக்குத் தோன்றாத் துணையாக வீற்றிருக்கும் அம்மனை நேரில் தரிசித்தது போன்றே உள்ளது பசுபதி அவர்களின் கண்ணிகள். மிகவும் சிறந்த கருத்துக்களை வைத்துப் பாடிய வண்ணக் களஞ்சியம் இந்நூல்.

எதுகை மோனைகளைத் தேடி அலைவார் சிலர். ஆனால் புலவருக்கு அவை தாமே வந்து பாடல்களில் துள்ளிக் குதிக்கின்றன. அம்பரன் என்ற அசுரனின் ஆனவத்தை அழிப்பதற்காக காளிதேவி தோன்றி அம்பரனை வதம் செய்ததால் அம்பகரம் என்ற பெயருண்டாயிற்று, பின்னாளில் அந்த இடம் அம்பகரத்தூர் ஆயிற்று என்று சொல்லாமல் சொல்லியுள்ளார் ஆசிரியர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வூர் காரைக்காலை அடுத்துள்ளது, இயற்கை எழில் சூழ்ந்துள்ளது. எங்கு காணினும் நீர் நிலைகள் குளங்கள் குளங்களில் பூத்துக் குலுங்கும் செந்தாமரை மலர்கள் கண்ணுக்கு விருந்தளிக்கின்றன. வயல்கள் சூழ்ந்த பகுதி அவற்றைக் கடந்தால் காட்சி தருவது காளி கோவில். அது ஆசிரியரின் இதயக் கோவில். அதனுள் விளங்குகிறாள் அம்மை. இந்தக் காட்சியைக் காணும் போதெல்லாம் தன் அன்னை. இவரை தோளில் சுமந்து சென்று காண்பித்த காட்சியையும், அன்னை கூறிய வாழ்த்துரைகளையும் பசுமை மாறாமல் தமது பாடல்களால் தீட்டி பரவசமடைகிறார்.

அம்மையை பார்த்துக் கொண்டே தலைமுதல் பாதம்வரை கேசாதி பாதமாக வருணனையைத் தொடங்கி வண்ணங்களில் வளர்த்துச் செல்லும் பாங்கு சுவை தருகின்றது. அம்மையை வேண்டுவோர்க்கு எல்லா நலன்களையும் தருவாள் என்பதற்கு.

"மலர்போல இதழ்விரிப்பாய் ஒழுக்கமுள்ள
மாந்தர்க்கே அருள் புரிவாய்" என்றும், தீயசிந்தனை உள்ளவர்களை அறிந்து என்ன செய்வாள் தெரியுமா "புல்லர்தம்மைக் கண்களிலே தீப்பறக்க கரித்தே கொல்வாள்" என்று பாடுகிறார்.

அம்பகரத்தாளை, பஞ்சவியே, பரசாங்குசையே, பஞ்சபாணி, பத்ரகாளி, கண்டி, மண்டலி, மாலினி, வாயகி, வராகி, மாகாளி, மகமாயி, சூலினி, மாதங்கி, நாயகி, நாராயணி சாம்பவி, பைரவி, பராசக்தி, வைரவி, வேதவள்ளி என்று அவளின் பெயர்களை விரித்துச் செல்லும் பாங்கினை இதன்கண் காண்கிறோம்.

விதி தனையே மாற்றிடுவாய், பிணிபலவும் நீக்கிடுவாய் பறந்தோடி வந்து அடியவர்தம் வலியைப் போக்கியருள்வாய் என்று பொதுவாக வேண்டும் இவரது அன்புள்ளத்தைக் கண்டு மகிழலாம்.

பொங்கிவரும் கடலும் நீ புனலும் நீயே
போர் செய்யும் ஆற்றல் நீ பொலிவும் நீயே
செங்கதிரும் நிலவும் நீ நிழலும் நீயே
தெளிவுதரும் தெய்வம் நீ வாழ்க வாழ்க!

என்று கூறி வாழ்த்தி முடிக்கின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இறுதியாக நூற்பயனைக் கூறும் போது இந்நூலைப் படிப்பவரது கருமவினை தீர்ந்து மனம் மகிழ்ந்து வாழ்வார் என்றும், நல்ல ஆயுள், நல்வாழ்வு நிலைக்க நீ அருள வேண்டும் என்று கூறியுள்ளது ஆசிரியரின் பொதுநோக்கு புலப்படுகின்றது.

பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடி மக்கள் மனதில் நீங்காத இடம் பிடித்துவிட்டார். புதுவை முத்துமாரியம்மனையும் பாடியுள்ளார். சக்தி கவசம் என்று ஒரு தலைப்பிட்டு அம்மனை வழிபட்டு வருபவர் எவ்வித இடையூறுமின்றி வாழ்வர் என்கின்றார்.

முருகப் பெருமானை வாழ்த்தி அவனுக்கு திருப்பள்ளி எழுச்சி பாடுகிறார். வேலனுக்கு வெண்பாவால் அந்தாதி பாடியுள்ளார். பிறகும் அவனுக்கு ஒரு சிந்துகவி பாடுகின்றார். சந்தப்பாடல் மூலம் தமது உள்ளத்தில் நீங்காமல் இருக்க வரமருள வேண்டும் என்று வேண்டுகிறார்.

காரை நகரை அடுத்துள்ள திருமலைராயன்பட்டினத்தில் காளமேகப் புலவர் தங்கி இருந்து ஆசுகவியால் வீசு புகழ் பெற்றதற்கும், தீபங்குடியில் செயங்கொண்டார் பிறந்து பரணி பாடியதற்கும் அம்பகரத்தூர் காளிதேவியின் அருளே காரணம் என எண்ணுகிறேன்.

அம்மன் அருளைப் பெற்று பல பாடல்களை இயற்றி தமிழுக்குப் பெருமை சேர்த்து வரும் கவிஞர் பொன் பசுபதிக்கும் அவளே தோன்றாத் துணையாக விளங்கி வருகிறாள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

கவிஞர் பொன். பசுபதி அவர்களின் அம்மன் பாடல்களால் அறிமுகமானேன். கலைமாமணி அரங்க. நடராசனார் இதற்கு உறுதுணையாக இருந்துள்ளார் அவருக்கு என் நன்றி, இந்நூலாசிரியர் அவர்கள் கலையாத கல்வியும் குறையாத வயதும் நோயில்லா வாழ்வும் பெற்று நீடு வாழ அம்பாள் துணை அருள்வாள். வாழியர் நலனே வாழியர் நலனே!

அன்புடன்

புலவர். **ந. வடிவேலன்**

03–07–2010.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எழிலுரை

அருளுள்ளங்கொண்ட அன்பர் பொன். பசுபதி அவர்கள் கடவுளரிடம் ஈடுபாடு மிகுதியும் உள்ளவர். எல்லாக் கடவுளரையும் மனமொன்றி வணங்கி மகிழ்பவர். 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பது உலக வழக்கு. சக்தி வழிபாட்டில் தோய்ந்த பாரதியார், 'எல்லாமே சக்தியின் இயக்கந்தான்' என்று பாடிமகிழ்வார். அவரைப்போன்றே, அம்பகரத்தூர் காளியம்மையை அருச்சனைப் பூக்களால் அருச்சிக்கும் பொன். பசுபதியவர்களும், உலகில் உள்ள எல்லாப் பொருள்களுமே காளியின் வடிவந்தான் என்று இந்த நூலில் உளம் நெகிழ்ந்து பாடியுள்ளார்.

கற்களிலும் உறைந்திருப்பாய் என்று, 52-ஆம் பாடலில் தொடங்குபவர், காற்றினிலும் கலந்திருப்பாய்! புல் நுனியில் முத்தாகப் பொலிவாய்! மழைத்துளியில் கரைந்திருப்பாய்! மலைமுகட்டில் நின்றிருப்பாய்! கழனிப் பயிர்களில் அசைந்தாடுவாய்! கனிகளில் இனிப்பாய்! காய்களில் கலந்திருப்பாய்! பனிப்பரப்பில் படுத்திருப்பாய்! கனல்கக்கும் பகலவனின் உள்ளேயும் இருப்பாய்! மரஞ்செடியாய் நின்றிருப்பாய்! நகரும் உயிர்களாய் நடைபயில்வாய்! மாந்தர் உள்ளத்துள் திகழ்வாய்! பூக்கும்குளத் தாமரையில் குறுநகை புரிவாய்! உயிர்களின் உள்ளத்தில் ஒன்றிடுவாய்! என்று 56-ஆம் பாடல்வரை இறைவியின் இருப்பிடங்களை அழகொழுக அடுக்கிப் பாடியுள்ள பாடல்கள் படித்துகளிக்கத் தக்கவை.

வயலெங்கும் சூழ்ந்திருக்க அங்கும் இங்கும்
வண்ணவண்ணப் பூப்பூக்கும் மலர்த்தோட் டங்கள்
கயல் துள்ளும் நீர் நிலைகள் கழனி எங்கும்
கலம் நிறைக்கும் நெற்பயிர்கள் காண்போம் அங்கே. (பா.8)

இவ்வழகிய வருணனைப் பாடல்போல் ஆறு பாடல்களில் அம்பகரத்தூரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் எழிலனைத்தையும் வடித்துக் கொடுத்துள்ளார் ஆசிரியர் அவர்கள். படித்துப் படித்துச் சுவைக்க வேண்டிய பாடல்கள் அவை.

உலகுக்கே உணவளிக்கும் உழவர்களின் நிலை இன்று கவலையளிப்பதாகவே உள்ளது. தண்ணீர் இல்லாத தொல்லை,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேலையாள் கிடைக்காத தொல்லை, தொழிற்சாலைக் கழிவுகளால் நிலங்கள் மலடாகிவிட்ட தொல்லை, எனப் பல தொல்லைகளால் வாடும் அவர்களின் அவலநிலையைக் கண்டு.

உழுதுபயிர் விளைவிப்போர் உழைத்து ழைத்தே
உணவின்றி உயிரேகும் நிலையில் உள்ள
பழுதில்லா மனத்தவரைத் தொல்லை நீக்கிப்
பாங்குறவே வாழவைப்பாய் பரிவின் ஊற்றே! (பா.78)

என்றுவேண்டுகிறார். தனக்காக ஒன்றையும் வேண்டாது பிறருக்காக இறைவியிடம் வேண்டிநிற்கும் ஆசிரியரின் பரந்த மனப்பான்மையைப் போற்றவேண்டும்.

ஒரு தாயிடம் அவளின் குழந்தை கண்டதையெல்லாம் தின்பதற்கு வாங்கிக்கொடு என்று கேட்குந்தான். குழந்தை விரும்பிக் கேட்கிறதே என்பதற்காக அந்தத்தாய் குழந்தையின் உடல் நலத்திற்கு ஏற்றது எது என்று அவளுக்குத் தெரியும்; அதை மட்டுந்தான் கொடுப்பாள் அல்லவா? அதேபோல், மக்கள் அம்பிகையிடம் பலவற்றையும் அளிக்குமாறு வேண்டினாலும், அவரவர்க்கு எது எது ஏற்றதோ, அதை மட்டுமே வழங்கி மக்களை வெற்றிபெறச்செய்யும் தாயாக விளங்குகிறாள் காளியம்மை என்பதை,

மாந்தர்தம் இயல்புகளை முழுமை யாக
மாலினியே நீயறிவாய் என்ற போதும்
வேண்டுதலும் வேண்டாமை தனையறிந்து
வேண்டியவை அளித்திடுவாய் வெற்றி காண. (பா.47)

என்று நுண்ணிதின் உணர்ந்து பாடும் பொன். பசுபதியவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

மன்னிப்பது வேறு; தண்டிப்பது வேறு.

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர். (குறள்.550)

என்பார் வள்ளுவர். திருந்தவே மாட்டார்கள் என்பவரைத் தண்டிக்கத்தான் வேண்டும். திருந்தக் கூடியவர்களை மன்னிக்கவும் வேண்டும். இறைவியிடம் இந்த இரு பண்புகளும் உண்டு. தீங்கு புரிந்தவர்கள் தாம் செய்த தவற்றை உணர்ந்து வருந்தி இறைவியின் மலரடிகளில் விழுந்து மன்னிக்க வேண்டுவார்களாயின், அவர்களை மனமிரங்கி மன்னித்து வாழவைப்பாள் என்கிறார் ஆசிரியர். அந்தப் பாடல் இது தான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வஞ்சனைகள் செய்தோரும் வருந்தி உன்றன்
மலரடிகள் பணிந்திட்டால் இரக்க முற்றே
கொஞ்சுமொழி யாலவரின் மனத்தை மாற்றிச்
கோலமுடன் வாழென்பாய் குலவும் குன்றே (பா.95)

இந்நூலின் 62-ஆம் பாடலில் பஞ்சவியே என்றழைப்போம்! என்று தொடங்கி, 68-ஆம் பாடல் வரையில் காளியம்மையின் பல்வேறு பெயர்களை வரிசைப்படுத்திப் பாடியிருப்பது படிப்போர் நெஞ்சை நெகிழவைக்கும்.

105-ஆம் பாடல் தொடங்கி 108-ஆம் பாடல்வரை ஒவ்வோர் அரையடி முதலிலும் அகரம் முதல் ஔ காரம் வரையிலான பன்னிரண்டு எழுத்துகளை முறையாக அமைத்து இறைவியின் புகழை மணக்கப் பாடியிருப்பது பாவலரின் பாவன்மைக்குச் சான்று பகரும்.

கள்ளமில்லா மனத்தினைரக் கருணை கொண்டே
களிப்புறவே வாழவைப்பாய்! (பா.29)

திருடுகின்ற தீயோர்கள் மனமே மாறித்
திருந்திடவே கெடுவைப்பாய்! (பா.33)

பலமுறைகள் இடர்களைவாய் பகைவர் தம்மைப்
பட்டென்று முடித்திடுவாய்! (பா.48)

விதிதனையே மாற்றிடுவாய் (பா.84)

மனத்திட்பம் உடல்திட்பம் வினையின் திட்பம்
வளத்தோடு விளங்கிடவே உதவும் தாயே! (பா.97)

ஓய்தலின்றி உலகாளும் உமையே! (பா.107)

போன்ற அம்பிகையின் அருட்குணங்கள் பலவற்றையும் நூ ல் முழுதும் வெளிப்படுத்தியுள்ளார்.

நூற்றெட்டு அருச்சனைப் பூக்களால் அம்பகரத்தூர் காளியைப் போற்றிப் பரவும் தூயமனத்தினரான பாவலர் பொன். பசுபதி அவர்கள் காளியன்னையின் அருளால் நோய் நீங்கிய உடலும், புகழோங்கிய வாழ்வும் பெற்று நெடிது வாழ எல்லாம் வல்ல இறைவியை இறைஞ்சி மணமுவந்து வாழ்த்துகிறேன்.

அன்பன்
அரங்க. நடராசன்
21-07-2010

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்னுரை

இன்றமிழ் சுவைஞர்க்கும் இறையுணர்வு கொண்டோர்க்கும் அடியனின் இனிய வணக்கத்தையும் வாழ்த்தினையும் இயம்பி இந்நூலைப் பற்றிய என் கருத்துக்களை இங்கு பதிவு செய்ய விழைகிறேன். அம்பகரத்தூர் பத்திர காளியம்மன் தோற்றத்தைப் பற்றியும் அவள் புரிந்த திருவிளையாடல்கள் பற்றியும் பல ஆன்மீக தமிழ்ப்புலவர்களும் எழுத்தாளர்களும் பல்வேறு நூல்களில் விரிவாக எடுத்துரைத்துள்ளனர்.

அருள்மிகு அம்பகரத்தூர் பத்ரகாளியம்மனை நினைந்து நான் புனைந்துள்ள பாக்களிலும் அவ்வரிய செய்திகள் சிறு சிறு குறிப்புக்களாக சுட்டப்பட்டுள்ளன. இங்கு என்னுடைய சில பொதுவான கருத்துக்களை மட்டும் தெரிந்தவரை தெளிவுபடுத்த முயல்கின்றேன்.

நன்றும் தீதும், இன்பமும் துன்பமும் சூழ்ந்த இவ்வுலகில் பல்லுயிர்கள் தோன்றி, வாழ்ந்து மடிகின்றன - மறைகின்றன. மற்ற உயிரினங்களிலிருந்து பெருமளவு வேறுபடும் மாந்தன், பகுத்தறியும் ஆற்றலைப் பெற்றதனால் தன்னுடைய அனுபவங்களை நினைந்து, ஆய்ந்து, ஆய்ந்து இந்த உலகையும் உயிரினங்களையும் படைத்தவன் ஒருவன் இருக்கத்தான் வேண்டுமென்றும், அப்படைப்பாளி எங்கிருக்கின்றான்? எவ்வகைத் தோற்றமுடையான்? நம்மிடையே தோன்றுவானா? அவனை நம்மால் காணுதல் ஏலுமா என்றெல்லாம் வினாக்கள் பலவெழுப்பி அவற்றிற்கு விடைகள் காணமுற்பட்டான்.

கூர்மதி கொண்ட மாந்தர் எல்லோருமே, இவ்வுலகையும், இவ்வுலக உயிர்களையும், உயிரற்ற பொருட்களையும் படைத்தவன் ஒருவன் இருக்கின்றான்; அவன் பேராற்றல் கொண்டவன்; அவனுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை; இந்த உலகையும் உலகப் படைப்புகள் அத்தனையையும் ஆள்பவன்; யாராலும் எவராலும் வெல்வதற்கரியவன்; அழிவிற்குட்படாதான்; என்பதையெல்லாம் தெளிந்துணர்ந்து அவ்வுண்மைகளை யாவருக்கும் எடுத்துரைத்தனர். மேலும் இறைவன் எங்கும் எதிலும் எப்பொழுதும் உறைந்திருப்பவன், பிறப்பும் இறப்பும் இல்லாதவன், படைப்பவனும் அவனே, காப்பவனும் அவனே, அழிப்பவனும் அவனே என்னும் கருத்துக்களை மேலும் எண்ணித்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெளிவுபெற்று அவற்றையும் பிறர்க்குப் பல வழிகளில் உணர்த்தினர். இறை மறுப்பாளரும்கூட இறைவனையும் இறையாற்றலையும் 'இயற்கை' என்ற சொல்லால் குறித்து இறைவனின் ஆற்றல்மிகு சத்தியை மறைமுகமாக ஒப்புக்கொள்கின்றனர். இதன் அடிப்படையில் தான் மாந்தரிடையே பல மதங்கள் தோன்றின. அவற்றுள் இந்து மதமும் ஒன்றாகும் என்பதை நாம் அறிவோம்.

இந்து மதத்தினர் மேற்குறித்த கருத்தை மையமாகக் கொண்டு தம்முள்ளேயே பரவிக்கிடக்கும் இறை சக்தியைத்தட்டி எழுப்பி, ஒன்றுகுவித்து, மேலேற்றித் தம்முடைய அறிவாற்றலையும் செயலாற்றலையும் பெருக்கிக் கொள்ளும் யுக்திகளையெல்லாம் கண்டறிய முற்பட்டு பலர் வெற்றியும் எய்தினர்.

விரும்புதல், அறிதல், வினையாற்றல் (இச்சா சக்தி, ஞானா சக்தி, கிரியா சக்தீ பெற்று, நல்லொழுக்கத்தோடும் தன்னம்பிக்கையோடும் வாழ இறையுணர்வும் இறைவழிபாடும் இன்றியமையாதனவற்றில் முதன்மையானவை என்பதால், அருவமாய் இருக்கும் இறைவனுக்கு உருவம் கொடுத்ததோடல்லாமல் தம்முடைய கற்பனைத் திறத்தால் பல வடிவங்களில் இறைவனை ஆணாகவும் பெண்ணாகவும் கருதிப் போற்றத் தொடங்கினர். அவ்வடிவங்களுக்குப் பெயருமிட்டு, அவற்றைச் சிலைகளாகவும் சிற்பங்களாகவும் ஓவியங்களாகவும் படைத்து வழிபடவும் தொடங்கினர். மக்கள் எல்லோரும் ஒன்றுகூடி இறைவனைப் போற்றி வழிபட்டுக் கொண்டாட பொதுவிடமாகப் பல்லாயிரக்கணக்கில் கோவில்கள் கட்டினர். அவையே பல்வேறு கலைகள் தோன்றவும் வளரவும் பெருங் காரணியங்களாயின.

மேலும் குமுகாயத்தில் அவ்வப்போது ஏற்படும் நிகழ்வுகளையும் இயற்கைக் காட்சிகளையும் வாழ்க்கை நடைமுறைகளையும் கல்வெட்டுகளிலும், ஓலைச்சுவடிகளிலும் பதிவு செய்தனர். காலப்போக்கில், உண்டான மொழி வளர்ச்சி பரிமானத்தால் செம்மொழி இலக்கியங்களும், இலக்கணங்களும் காவியங்களும், காப்பியங்களும் மேற்குறித்த கருத்துக்களை உள்ளடக்கித் தோன்றலாயின. அவற்றில் தம் மனக்கண்களால் கண்ட கடவுளர்களையும், பல்வேறு பண்புகள் கொண்ட மாந்தரையும், மற்றுமுள்ள உயிரினங்களையும், உயிரற்றவைகளையும் இனைத்துக் கதை மாந்தர்களாகவும், கதைக் காட்சிகளாகவும் படைத்து மகிழ்ந்தனர். இப்படைப்புகள் யாவற்றிலும் கற்பனைச் செய்திகள் சற்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மிகைப்படுத்தப்பட்டுக் காணப்பட்டாலும் அவை யாவும் மொழி இலக்கண அணிகளுக்கு உட்பட்டு, பாத்திரங்களுக்கும் நிகழ்வுகளுக்கும் ஏற்ப மொழிச் செறிவோடும், நயத்தோடும் இன்பம் பயப்பனவாகவே திகழ்ந்து, இன்றும் காலத்தால் அழியா ஒழுக்க நெறி நூல்களாகத் திகழ்கின்றன. இவ்வான்மீக நூல்களின் மையக் கருத்துக்கள் யாவையெனில், இறைவனே உலகத்தை ஆள்பவன்; நல்லோர் வாழ்வர், தீயோர் அழிவர்; நல்லவை நிலைக்கும் தீயவை ஒழியும், என்பன போன்றதே. அவையாவையும் அற நூல்களாகத் திகழ்கின்றன. அறநெறியுற்றால்தான் நாம் பெருநிலை மாந்தராய் வாழ இயலும். இவ்வண்ணம் தோன்றிய பனுவல்களுள் அம்பகரத்தூர் பத்ரகாளியம்மன் வரலாறும் ஒன்று.

அம்பகரத்தூரில் யாவர்க்கும் அருந்துணையாய் விளங்கி நலங்காத்து அருள் பாலிக்கும் நாயகி பத்ர காளியம்மன், நான் வணங்கும் தெய்வங்களுள் ஒன்றாவாள்.

அம்பகரத்தூரின் மிக அருகிலுள்ள சிற்றூர் ஒன்றுதான் நான் சிறுவனாய் இருந்தபோது என்றன் தாய் வழிபாட்டியின் இருப்பிடம். இவ்வரிய பேற்றினால் பத்ர காளியம்மனைப் பல முறை காணும் இனிய வாய்ப்புகள் எனக்கு அமைந்தன. எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல், என்னுள்ளத்துள் நீக்கமற நிறைந்திருக்கும் தெய்வங்களுள் ஒன்றாக இருந்து இடர்வந்தென்னைச் சிதைக்கும் போதெல்லாம் ஈடேற்றி இதமளிப்பவள் அருள் மிகு பத்ர காளியம்மாள்.

அண்மையில் என் குடும்பத்தில் விளைந்தவொரு துன்பத்திலிருந்து விடுபட வழியேதுமின்றித் தவித்தபோது அன்னை அம்பகரத்தூர் மாகாளியின் இன்னருளை மனமார வேண்டி நாடினேன். அவ்விடரும் நீங்கியது. என்னுடைய நீங்கா அன்பும் பக்தியும் தோய்ந்தவொரு நன்றிக் கடனாக, பத்ர காளிக்குப் பாமாலையொன்று புனைந்து போற்றுவேன் என்று சூளுரைத்தேன். பாடல் தொடுக்கத் தொடங்கியபோது பாடல்களின் எண்ணிக்கை பத்தென்றாகி பின்பு ஐம்பதென்றாகி, அதன் பிறகு மேலும் பெருகி நூறென்றாகி இறுதியாக நூற்றியெட்டானது. இது என்னைப் பெருமகிழ்ச்சியில் ஆழ்த்தியது. அதன் விளைவுதான் இந்நூல் வெளியிடு!

அளவற்ற சக்தியுள்ள அம்பகரத்தூர் பத்ர காளியம்மன் புகழினைப் பறைச்சாற்றும் வண்ணம் இன்றமிழில் அடியேன் இயற்றிய காளியம்மன் பாடல்களையும் மற்றுமுள பக்திப் பாடல்களையும் ஆன்மீக அன்பர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அனைவரும் ஓதி உணர்ந்து வாழ்வில் ஏற்றமும் ஊற்றமும் பெற்று மகிழ வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு இப்படைப்பினை வெளியிட்டு மகிழ்கிறேன்.

இந்த நேரத்தில், நான் மரபுப் பாடல்கள் எழுத முனைந்தபோது முதலில் எனக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து வழிகாட்டிய (அண்மையில் நம்மைவிட்டுப் பிரிந்த) இலக்கணச் சுடர் முத்தமிழ்ப் புலவர் முனைவர் இரா.திருமுருகனாருக்கு மீண்டும் அஞ்சலி செலுத்தி நன்றியினையும் பதித்து அமைதியுறுகிறேன்.

மேலும், மிகக்குறுகிய காலகட்டத்திலேயே என்மீது மிகுந்த அன்பு கொண்டு எனக்கு அவ்வப்போது ஏற்படும் தமிழிலக்கண ஐயப்பாடுகளை யெல்லாம் நீக்கித் தெளிவுபடுத்தி எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி ஆசானாக விளங்கி உதவிவரும் போற்றுதலுக்கும் மரியாதைக்கும் உரிய ஐயா அந்தாதிச் செல்வர் கலைமாமணி புலவர் அரங்க. நடராசன் அவர்கட்கும் என் உளமார்ந்த நன்றியினை இங்குப் பதிவு செய்வதோடு, அவர் என்மீது பேரன்பு கொண்டு இந்நூலுக்கு செய்யுள் வாழ்த்தளித்தும் எழிலுரை நல்கி பெருமை சேர்த்ததற்கும் மீண்டும் நன்றி கூறி மகிழ்கிறேன்.

இந்நூலுக்கு மனமுவந்து அணிந்துரை அளித்துச் சிறப்பித்த சித்தாந்த ரத்தினம் புலவர் ந. வடிவேலனார் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை வெளிப்படுத்தி உளமகிழ்கின்றேன்.

இறுதியாக இந்நூலைக் குறுகிய காலத்தில் அச்சிட்டு உதவிய புதுவை அகத்தியர் அச்சக உரிமையாளர் திரு. ந.இளம்பூரணன் அவர்கட்கும் நன்றி பாராட்டி என் கடமையைப் பூர்த்தி செய்து மகிழ்கின்றேன்.

இச்சிறிய நூலின் 'என்னுரையிலோ', படைத்த பாடல்களிலோ பிழையேதும் காணபின் என்னைப் பொறுத்தாட் கொண்டு, நிறைகளை மட்டும் போற்றி மகிழுமாறு தமிழ்ச் சுவைஞர்களையும் ஆன்மீக அன்பர்களையும் வேண்டுகிறேன்.

நன்றி! வணக்கம்!

அன்பன்

பாவலர் பொன். பசுபதி

புதுச்சேரி,

நாள் : 01.07.2010

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உள்ளடக்கம்

		பக்கம்
1.	வேத முதல்வன்	21
2.	அம்பகரத்தூர் காளிக்கு அருச்சனைப் பூக்கள் நூற்றியெட்டு	22
3.	புதுவை முத்துமாரியம்மன்	41
4.	சக்தி கவசம்	43
5.	முருகா உன்னை வழுத்துவமே!	47
6.	முருகன் திருப்பள்ளியெழுச்சி	49
7.	வேலனுக்கொரு வெண்பாவந்தாதி	51
8.	எல்லாம் 'அவன்' செயல்	53
9.	வணங்கியே போற்றுவோம்	56
10.	எனதுளம் புகுவாயே!	58
11.	வாழ்த்து	59
12.	ஆசிரியரின் பிற நூல்கள்	60

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேத முதல்வன்

(இசைப்பாடல்)

தும்பிக் கையோன் அருள்
துணையிருந்தால் போதும்
துன்பமெல்லாம் நீங்குமே – அந்த
வேத முதல்வனை
வேண்டிக் கொண்டால் போதும்
வேதனைகள் குறையுமே! (தும்பிக்)

பொறுமையின் சின்னமவன்
கருணையின் களஞ்சியம்
கரிய நிறம் கொண்டோன்
பெரியநல் தெய்வமவன்
ஏழைகள் குறைகளை
கேட்பவன் தீர்ப்பவன்
பேழை வயிறு கொண்டோன்
பெருமைகள் வாய்ந்தவன் (தும்பிக்)

சீலத்தைத் தருபவன்
ஞானத்தை அளிப்பவன்
காலத்தையும் வெல்லும்
கோலத்தைக் கொடுப்பவன்
எண்ணிய தெல்லாமே
எளிதினில் அளிப்பவன்
பண்ணிய வினை யெல்லாம்
பயனுறச் செய்பவன் (தும்பிக்)

எதையும் துவக்கும் முன்னே – அவனை
நினைத்து ஒரு சுழி போடு
எதிலும் வெற்றி தருமே – அன்றி
என்றும் வராது கேடு
பிள்ளையா ரப்பனே பிள்ளையா ரப்பனே
என்று தினமும் பாடு
தொல்லைகள் இல்லா வாழ்வைப் பெறவே
தொந்திக் கடவுளை நாடு (தும்பிக்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்பகரத்தூர் காளிக்கு அருச்சனைப் பூக்கள் நூற்றியெட்டு

காப்பு

(நேரிசை வெண்பா)

அம்பகரத் தூரிலே ஆட்சிசெய் காளியை
நம்பினோர்க் கெல்லாம் நலம்புரியு(ம்) – அம்பாளை
நெஞ்சுருகப் போற்ற நினைத்தேன் முருகா நின்
கொஞ்சுதமி ழென்நாவி லேற்று.

(குறள் வெண்பா)

அறங்காத் தெமைக்காக்கு மன்னையே காளி
நிறைவாழ் வெமக்களிப்பாய் நீ.

நூல்

1. அம்பரனி ணாணவத்தை அழிப்ப தற்கே
அம்பனவன் தம்பியையும் அகற்று தற்கே
நம்பியோரி னுயிர்காக்க சிவனே உன்னை
நற்றுணையாய் அனுப்பி வைத்தான் காளியம்மா!

2. அம்பகர மென்றவூரே மருவி மக்கள்
அம்பகரத் தூரென்றே அழைக்க லுற்றார்
துன்பமெலாம் தீர்த்திடவே தெய்வ மானாய்
தூயவளே தூமணியே துர்க்கை யம்மா!

3. காரைக்கா லெல்லையிலே – காளி யுன்றன்
கால்பட்ட வுடனேயே களிப்போ டந்த
ஊருள்ளே யொன்றினையோ உலகம் காக்க
உன் சக்தி பெருகியதே உமையே காளி!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. அம்பகரத் தூர்தன்னில் கோவில் கொண்டாய்
அன்றுமுத லவ்வூரை ஆளு கின்றாய்
வன்புகளைக் களைந்திடவே வானி ருந்து
வந்தாயோ எமைகாக்க வக்ரகாளி?

5. சலசலக்கும் பனைமரங்கள் சாய்ந்தும் நின்றும்
சாலையோரம் வரப்போரம் சார்ந்தி ருக்கும்
பலவிடத்தில் வளர்தென்னந் தோப்பு மங்கே
பார்த்திடலாம் உனைச்சுற்றிப் பத்ரகாளி!

6. மாந்தோப்பு மனம்வீசும் மல்லித் தோட்டம்
வழியோர(ம்) ஆலமரம் வன்னி வேம்பும்
மாந்தர்க்கும் மற்றுயிர்க்கும் உதவும் வண்ணம்
வரிசையாக உளதங்கே வண்ணம் சேர!

7. செந்தாம ரைக்குளங்கள் சின்னச் சின்ன
சீர்கொண்ட வெண்தாம ரைக்கு ளங்கள்
அந்தியிலே இதழ்விரிக்கும் அல்லிப் பூக்கள்
ஆங்காங்கே காட்சிதரும் அம்மா காளி!

8. வயலெங்கும் சூழ்ந்திருக்க அங்கு மிங்கம்
வண்ணவண்ணப் பூப்பூக்கும் மலர் தோட்டங்கள்
கயல்துள்ளும் நீர்நிலைகள் கழனி யெங்கும்
கலம்நிறைக்கும் நெற்பயிர்கள் காண்போம் அங்கே!

9. வயல் பரப்பில் வரப்பினிலும் பசுமைக் காட்சி
வாய்க்காலில் நீரோடும் அமைதி மாட்சி
கயல்விழிகள் கொண்டுள்ள கன்னிப் பெண்கள்
கரையோரம் குளிப்பார்கள் களித்தே கூடி!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

10. நண்டுபல தம்வளைக்குள் வந்தே போகும்
நத்தைகளும் சேற்றினிலே நகர்ந்தே செல்லும்
வண்டுபல தேனையுண்ண ஒளியெ ழுப்பி
வண்ணப்பூக் களைத்தேடும் வட்டம் இட்டே!

11. ஓங்காரி ஒய்யாரி உமையே சக்தி
உள்ளத்தில் உறைபவளே உயிரே தாயே!
ஆங்காரி அகிலத்தை ஆளு கின்ற
ஆற்றலெலாம் பெற்றவளே! அறிவின் ஊற்றே!

12. சிங்காரி சீர்பெற்ற தாயே சக்தி
திரிசூலி சிவகாளி நீதா னன்றோ?
எங்கெங்கும் நிறைந்தவளே எழிலே சக்தி
எமையெல்லாம் ஏற்பவளே எங்கள் தாயே!

13. கந்தன்றன் குடிதன்னில் சக்தி வேலன்
கனிவுடனே வீற்றிருக்க நாங்க ளெல்லாம்!
உன்னழகு மடிமீதில் தலையை வைத்தே
உறங்குவதாய் உணருகிறோம் ஓம் ஓம் காளி!

14. தென்திசையில் வீற்றிருந்தே வடக்கை நோக்கும்
தேவியுன்றன் அருள்வெள்ளம் தேங்கி டாமல்
எண்டிசையும் பரவிநலம் புரியு தம்மா
ஏற்றமிகு கொற்றவையே எங்கள் சக்தி!

15. நூலாற்றின் கரைவழியே நாங்க ளெல்லாம்
நுன்முகத்தைக் காண்பதற்கே குடும்பம் சூழ
கால்நடையாய் வந்துன்றன் மலரை யொத்த
காலடிகள் தொழுவோமே கண்ணால் கண்டே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

16. பாலகனாய் இருந்திட்ட போதே நானும்
பக்தியுடன் உனைத்துதித்தேன் அறிவா யம்மா
காலமெலாம் உனை நினைத்தே என்ற னுள்ளம்
கசிந்துருகி மகிழ்ந்திடுமே கருணை ஊற்றே!

17. என்னன்னை அன்றொருநாள் உன்றன் மேனி
எழில் வடிவம் முதன்முதலில் காண வைத்தாள்
அன்றுமுதல் நீயுமென்னை மகனைப் போன்றே
அன்புடனே காக்கின்றாய் ஆற்றல் கொண்டே!

18. "அச்சமெதும் கொள்ளாதே ஆத்தாள் இங்கே
ஆத்திரமாய்த் தோன்றினாலும் அன்பு கொண்டே
உச்சிமோந்தே யுனையணைப்பாள் கைகளாலே
உனைத்தூக்கி முத்தமீவாள் உளம்ம கிழ்ந்தே!

19. இச்சைபல தீர்ப்பவளும் அவளே யன்றோ?
இவ்வுலக சக்தியன்றோ? அம்மா உன்னை
நிச்சயமாய்க் காத்திடுவாள் உன்றன் வாழ்வில்
நிம்மதியை தந்திடுவாள் நீலி யம்மா"

20. என்றேயென் அன்னையவள் தோளின் மேலே
ஏற்றியெனை மகிழ்ச்சியுடன் அமரச் செய்தாள்
"கண்திறந்து பார்த்திடையா நம்மாத் தாளைக்
கண்டவுடன் கும்பிடெ"ன்றாள் கண்ணம் தட்டி!

21. திரைச்சீலை நீக்கியதைத் தெரிந்து பார்த்தேன்
"திக்" கென்றே திகைத்திட்டே(ன்) ஒருக ணத்தில்
கரைந்துவரும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே
காளியைநான் பார்த்திட்டேன் கண்கள் ஊன்றி!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

22. அழகுடைய சிவசக்தி! ஈசன் உன்னை
அசுரர்களை யழிப்பதற்கே அனுப்பி வைத்தான்
எழில் மிகுந்த வுருவுடையாய் எமனே அஞ்சும்
இணையில்லாச் சினம் கொண்டாய் எனினும் நாங்கள்

23. கற்பூர வொளியினிலே யுன்றன் தோற்றம்
கண்டுகண்டு களிக்கின்றோம் கண்ணில் தோன்றும்
பொற்பாதம் பணிந்திடுவோம் புவியை யாளப்
பூத்தவளே பொன்மணியே பொலிவே! பொற்பே!

24. கருமைநிறக் காத்தாயி யுன்னி ரண்டு
கண்களுமே பிதுங்கிசெங் கனலை வீச
பெருமூச்சால் மார்பசைய வெகுண்ட தோற்றம்
பித்தரெலா(ம்) ஓடுதற்கா பெற்று வந்தாய்!

25. வலக்கைகள் நான்கினிலும் முறையோ டங்கே
வன்சூலம் கூர்வாளும் மற்றும் நல்ல
ஒலிசெய்யு(ம்) உடுக்கையுடன் கிளியு மென்றே
ஒவ்வொன்றாய் ஏந்தியுளாய் உருவம் மாறி!

26. இடக்கைகள் நான்கினிலு(ம்) இயங்கும் பாச(ம்)
இடர்தடுக்கும் கேடயமும் மணியும் மேலும்
படபடக்கச் செய்கின்ற கபால மொன்றும்
பாங்குடனே ஏந்தியுளாய் பயத்தை மூட்டி!

27. இருநான்கு கைகளிளும் இவ்வண் ணம்நீ
ஏற்றபொருள் ஏந்தியுளாய் என்றன் தாயே
கருமாரி யம்மாவும் காத்தா யும்நீ
கயமைகளை யழித்தொழிப்பாய் காக்கும் தாயே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

28. இடையின்மேல் சுற்றிலங்கும் ஒட்டியாணம்
எழில் மூக்கி(ன்) இருபுறமும் இலங்கும் வைரம்
உடையவொளி நகைஇரண்டும் புதுமை செய்தே
உன்னதமாய் தோன்றுதம்மா உகர காளி!

29. வெள்ளைநிற உடையணிந்தே எம்மை யெல்லாம்
வெண்மனத்தர் ஆக்கிடுவாய் வீரி! சூரி!
கள்ளமில்லா மனத்தினரைக் கருணை கொண்டே
களிப்புறவே வாழவைப்பாய் காளி தேவி!

30. கோபமுடன் அமர்ந்திருக்கும் பொழுதி லுன்றன்
குவிந்தயிரு கொங்கைகளும் புடைப்பதென்ன!
தீபவொளி பட்டவுடன் தெரியு துன்றன்
தீரமெல்லாம் "பளிச்" சென்றே திருவே காளி!

31. பயமுறுத்தும் வாயோரக் கோரைப் பற்கள்
பாதகர்கள் பார்த்தவுட(ன்) அச்ச முற்றே
தயங்கிடுவார் தவறுசெய நல்லோ ராகித்
தவறெதுவும் புரியாரே தருக்கர் தாமும்.

32. இடதுகாலைத் தரையிலூன்றி வலது காலை
எழிலாக சற்றுமேலே ஊன்றி யுள்ளா(ய்)
இடர்செய்யும் ஈனர்களைக் காலா லெற்றி
எறிந்தவரைத் திருத்ததற்கோ எதற்கோ? சொல்வாய்!

33. திருடுகின்ற தீயோர்கள் மனமே மாறித்
திருந்திடவே கெடுவைப்பாய் சீற்றங் கொண்டே
திருந்தாமல் இருந்தாலோ தானாய் மாறித்
திருந்திடவும் செய்திடுவாய் தில்லை யம்மா!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

34. சிங்கத்தின் மீதேறி எங்களுக்குச்
சீர்செய்ய வந்துளாயோ சிவனார் பங்கே?
எங்கணுமே உயிர்த்திருப்பாய் ஏய்த்தே வாழும்
எத்தர்களை மிதித்தொழிப்பாய் இன்னல் நீங்க!

35. வம்புபல செய்வோரை வண்மை யோடே
வஞ்சனைசெய் முரடரைநீ வலிமை கொண்டே
கொன்றிடவே கைதனிலே கூர்மை யுள்ள
கொலைச் சூலம் கொண்டனையோ கூறு தாயே!

36. தீயோர்க(ள்) அஞ்சுதற்கே கண்ணி ரண்டும்
தீப்பிழம்பாய் சிவந்தனவோ? சீரே யற்ற
நாயைவிட கிழ்க்கொலைஞர் நடுந டுங்க
நாயகிநீ தோன்றியுளாய் நல்லோர் வாழ!

37. அடுத்தகணம் கழிந்ததுமே அம்மா நீயே
அமைதியுடன் தோன்றிடுவா(ய்) அழகு பொங்க
கடுத்தமுகம் மாறியுன்றன் முகத்தை நோக்கின்
கருணையுளம் தெரியுதம்மா கங்கை யம்மா!

38. எலுமிச்ச தாரணியும் எங்கள் காளி
இரக்கமிலா வசுரர்களை வென்ற தோளி
வலிமையுடை வீணர்களை வீழ்த்தும் வீரி
வல்லமையை வழங்குமெங்கள் வடிவே காளி

39. வண்ணவண்ண மலர்கோத்த மாலை தொங்க
மகுடத்தைத் தலைமீதே யணியும் எங்கள்
எண்ணத்தில் தோய்ந்திருக்கும் இனிய மாதா
இணையில்லா இனியவளே எங்கள் வாழ்வே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

40. அடியார்கள் பக்தியுடன் அன்பாய்ச் சாற்று(ம்)
அழகுமலர் மாலைபல வணிந்தே யுள்ளாய்
முடியாதென் றொன்றுமிலை யுன்னை வேண்டின்
முகம்மாறி வந்தவளே முகிலே காளி!

41. மாவிளக்கின் சுடரொளியில் நட்டம் ஆடி
மங்கையர்க்கு மடிபிச்சை அளிக்கும் தாயே
காவலுக்காய் இங்குதித்த கந்தன் தாயே
கருணையுளம் படைத்தவளே களிப்பின் ஊற்றே!

42. மாவிளக்கை எற்றிவைத்தே மறவா துன்றன்
மலரடியை வணங்கிவரின் மனமு வந்தே
தேவிபரா சக்தியம்மா அடியார்க் கெல்லாம்
திருவுடனே நலமீவாய் தெளிவும் சேர்த்தே!

43. குங்குமத்தில் குடிகொண்டே குறைகள் போக்கும்
கூர் மதியே கொற்றவளே குலவும் தாயே
தங்குபுகழ் கொண்டவளே தாயே எங்கள்
தரமுயர தக்கெனசெய் தருவே! தாயே!

44. இச்சையுடன் குழந்தைகளை இறைவி யுன்றன்
இருபாதம் முன்கிடத்தின் அவரை என்றும்
கச்சிதமாய்க் காத்திடுவாய் கவலை யின்றிக்
கலங்காமல் வாழவைப்பாய் கருணை வைத்தே!

45. உழுதுபயிர் விளைவிப்போர் உழைத்து ழைத்தே
உணவின்றி ஓடாகி யுள்ளோர் மற்றும்
பழுதில்லா மனத்தோரைப் பண்புள் ளோரைப்
பற்றுடனே காத்திடுவாய் பயன ளித்தே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

46. அருச்சனைகள் செய்திடுவோம் அன்பாய் போற்றி
ஆதரிப்பாய் எனகேட்போம் அச்ச மின்றி
விருப்பங்கள் இயம்பிடுவோம் இனிதாய் எம்மை
வெற்றியுறச் செய்திடுவாய் விளங்கு தற்கே!

47. மாந்தர்தம் இயல்புகளை முழுமை யாக
மாலினியே நீயறிவாய் என்ற போதும்
வேண்டுதலும் வேண்டாமை தமைய றிந்தே
வேண்டியவை யளித்திடுவாய் வெற்றி காண!

48. மலர்போல விதழ்விரிப்பாய் ஒழுக்க முள்ள
மாந்தற்கே யருள்புரிவாய் அன்பி னாலே
பலமுறைகள் இடர்களைவாய் பகைவர் தம்மைப்
"பட்" டென்று முடித்திடுவாய் பாவம் நீங்க!

49. புன்னகையால் பூத்திடுவாய் விரிந்தி ருக்கும்
பூதலமே நலமுறவே புல்லர் தம்மைக்
கண்களிலே தீப்பறக்க கரித்தே கொல்வாய்
காணாம லோட்டிடுவாய் கலக்கம் நீங்க!

50. மணமாகப் பெண்களெலாம் உன்னை நாடி
மணமுடித்து வைக்கவென வேண்டி நிற்பின்
மனம் நிறைந்த வாழ்க்கைக்கு மனதுக் கேற்ற
மணமகனை முடித்துவைப்பாய் மகிழ்ச்சி பொங்க!

51. குருடர்களும் செவிடர்களும் பிறக்கும் போதே
குறையுற்று வாழ்வோரும் உன்னை வேண்டின்
விரைந்தவரை வெற்றிபெறச் செய்வாய் அம்மா
விண்ணிருந்து வந்தவளே வீறு கொண்டே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

52. கற்களிலும் உறைந்திருப்பாய் வீசு கின்ற
காற்றினிலும் கலந்திருப்பாய் பச்சை வண்ணப்
புற்றரைமேல் புல்நுனியில் பொலிவாய் நீயும்
புத்தொளிசேர் முத்தாவாய் பொன்னி யம்மா!

53. மழைத்துளியில் கரைந்திருப்பாய் மாதா! நீயும்
மலை முகட்டில் நின்றிருப்பாய் நன்னீர் பாயும்
கழனிகளின் பயிர்களையும் காத்தே நன்றாய்க்
களம்நிறைய நெற்குவிப்பாய் கந்தன் தாயே!

54. கனிகளிலு(ம்) இனித்திருப்பாய் கனியும் முன்னே
காய்களிலும் கலந்திருப்பாய் குளிர்ந்தி ருக்கும்
பனிப்பரப்பில் படுத்திருப்பாய் கனலைக் கக்கும்
பகலவன்றன் உள்ளுமுளாய் பார்வி ளங்க!

55. மரஞ்செடியாய் நின்றிருப்பாய் நகர வல்ல
மற்றுமுள வுயிராக நடைப யில்வாய்
திருவுடைய மாந்தர்தம் உள்ளத் துள்ளே
திகழ்ந்திடுவாய் எண்ணமாக தெளிவை தந்தே!

56. குளத்தின்மேல் தாமரையாய் பூத்தே எங்கும்
குறுநகையைப் பொழிந்திடுவாய் உயிர்கள் தம்மின்
உளத்தினிலே ஒன்றிடுவாய் நாங்க ளெல்லாம்
உளமகிழ வாழ்ந்திடவே ஒளிவி ளக்கே!

57. பாய்ந்துவரும் அலைகடலாய்த் தோன்றி இந்தப்
பாரினையே வியப்பினிலே ஆழ்த்து கின்றாய்
ஓய்வெதுவும் இல்லாமல் உலகை என்றும்
உருக்குலையா தியக்குகிறாய் உயிரே காளி!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

58. ஓடுகின்ற மேகமென வான மெங்கும்
உலவுகின்றாய் மகிழ்வாக உமையே காளி
வாடாமல் பயிர்வளர வழிவ குத்தே
வான்மழையாய்ப் பெய்கின்றாய் வளமே ஓங்க!

59. பொந்துகளில் நீயிருப்பாய் அரவம் வாழும்
புற்றினிலும் புகுந்திருப்பாய் புலன்கள் தோற்றும்
விந்தினிலும் உயிர்த்திருப்பாய் ஆண்–பெண் சேரும்
மெய்யுணர்வால் உயிர்படைப்பாய் மேன்மை பொங்க!

60. கார்குழலி என்றழைப்போம் நாங்க ளுன்னை
காத்தாயி என்றிடுவோம் களிப்பு கொண்டே
ஊர்காக்கும் தெய்வமென்போம் மேலும் உன்னை
உயிர்காக்கும் சக்தியென்போம் உருகும் நெஞ்சே!

61. எக்குறையும் தீர்க்கவல்ல இறைவி என்போம்
எந்தாயே எனவிளிப்போம் மகிழ்ந்தே என்றும்
அக்கறையோ டெமைகாக்கும் தெய்வம் நீயே
ஆதரித்தே யருள்புரிவாய் அன்பின் ஊற்றே!

62. பஞ்சவியே என்றழைப்போம் பாங்கோ டுன்னை
பாசாங்கு சையென்போம் மேலும் உன்னைப்
பஞ்சபாணி என்றழைப்போம் பயத்தோ டுன்னைப்
பத்ரகாளி என்றிடுவோம் பதங்கள் தொட்டே!

63. சண்டிகாளி என்றழைப்போம் நாங்கள் உன்னைச்
சக்தியுமை என்றிடுவோம் மேலும் நாங்கள்
மண்டலிமா லினியென்போம் மாதா வுன்னை
மனதாரப் போற்றிடுவோம் மகிழ்ச்சி உற்றே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

64. வாயகியே வராகியே மணியே என்போம்
மாகாளி மகமாயி என்றும் சொல்வோம்
சேய்களன்றோ உன்றனுக்கு நாங்க ளெல்லாம்
செவிசாய்த்துக் குறைதீர்ப்பாய் சீர்செய் தாயே!

65. சூலினியே என்றழைத்தே உன்றன் வெற்றிச்
சூலத்தை வணங்கிடுவோம் எம்மைக் காக்கும்
வேலியாக விளங்கிடுவாய் வெற்றி காண
வேதமெல்லாம் அறிந்தவளே வேலன் தாயே!

66. மாதங்கி என்றழைப்போம் எங்கள் அன்பு
மாதாபி தாவும்நீ யன்றோ அம்மா?
சேதங்கள் ஏதேனும நேரு மென்றால்
தேடியெமைத் தேற்றிடுநல் தெய்வம் நீயே!

67. நாயகியே என்றுரைப்போம் நளினம் மிக்க
நாராய ணியென்போம் சக்தி என்போம்
சாயகியென்(று) உரைத்திடுவோம் வீர முள்ள
சாம்பவியும் நீதானே தாயே காளி!

63. பைரவியே என்றழைப்போம் உன்னை நாங்கள்
பராசக்தி என்றிடுவோம் பாசம் கொண்டே
வைரவியே என்றழைப்போம் தாயே வுன்னை
வணங்கிவுயிர் வாழ்ந்திடுவோம் வாடி டாமல்!

69. நெஞ்சினிலே நீயிருக்க நாங்கள் என்றும்
நேர்மையுடன் வாழ்ந்துவர கொஞ்சம் கூட
அஞ்சுவதற் கேதுமில்லை என்றே யுன்றன்
ஆசிதனை வேண்டுகிறோம் காளி யம்மா!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

70. பஞ்சைவிட மென்மையுளம் படைத்த தாயே
பாசமுள்ள நாயகியே நாங்கள் எல்லாம்
அஞ்சிடவே கேடுவரின் எம்மைக் காக்க
அடுத்தகணம் தோன்றிடுவாய் ஆத ரித்தே!

71. கொஞ்சிடவே எம்கனவில் நீயே தோன்றிக்
கோலமுடன் காட்சிதந்தே குலவிச் செல்வாய்
மஞ்சள்ம ணம்வீசும் முத்தம் இட்டே
மகிழ்வுறவே துயிலவைப்பாய் மணியே! முத்தே!

72. பொற்புகளும் மிக்குடையாய் புகழ்சேர் காளி
பொறுத்திடுக செய்தவற்றை! சூதே இல்லாக்
கற்புடைய மங்கையர்தம் கற்பை நீயும்
காப்பாற்றி வாழச்செய் கனிவு கொண்டே!

73. உத்தமரைக் காத்திடுவாய் உமையே காளி
உளிர்களெலாம் உயர்வதற்கே எம்மை நீயே
வெற்றிபெறச் செய்திடம்மா தோல்வி யின்றி
வேதனையைப் போக்கிடம்மா வேத வள்ளி!

74. அல்லல்கள் நீக்கிடுவாய் உன்றன் முன்னே
அழுதழுது புலம்புகையில் ஆற்று விப்பாய்
வல்லமைகள் பெற்றவளே வல்வி னைகள்
வருத்தாமல் பார்த்திடம்மா வண்ணப் பூவே!

75. காலூனம் கையூனம் எந்த வூனம்
கண்டாலும் மனமுருகி நலமே செய்வாய்
காளிநீயே கதியென்றுன் காலில் வீழ்வோம்
கவலைகளை நீக்கிடுவாய் கருணை காட்டி!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

76. தொற்றுநோய் வந்தாலு(ம்) உன்னை வேண்டின்
துரத்தியதைப் போக்கிடவே துணையாய் நிற்பாய்
பற்றுன்மேல் வைத்திட்டால் போதும் தாயே
பறந்தேகும் பழியாவும் பனிபோ லன்றோ!

77. நன்றென்றும் தீதென்றும் நாங்கள் கொள்ள
நாயகியே நீதானே பகுத்துக் கூறி
என்றென்றும் உன்னருளால் நாங்கள் வாழ
ஏற்றதெலாம் செய்வாயே எழிலே காளி!

78. உழுதுபயிர் விளைவிப்போர் உழைத்து ழைத்தே
உணவின்றி உயிரேகும் நிலையி லுள்ள
பழுதில்லா மனத்தவரைத் தொல்லை நீக்கிப்
பாங்குறவே வாழவைப்பாய் பரிவின் ஊற்றே!

79. ஊழியங்கள் செய்பவரும் உழைத்தும் கூட
உண்ணவுண வில்லாமல் தவிப்போர் தம்மை
வாழவழி செய்திடுவாய் அவர்தம் வாழ்வில்
வன்பசிநோய் நீக்கிடம்மா மதிசேர் காளி!

80. வாணிபங்கள் செய்பவரும் மற்றும் உன்னை
வணங்கிடுவோர் வழிபடுவோர் எல்லாருக்கும்
வேண்டுகிற செல்வமெலாம் தருவாய் அம்மா
வேல்விழியே வெண்மதியே! வீசும் காற்றே!

81. எம்குலத்துத் தெய்வம் நீ எந்தாய் காளி
எண்டிசையும் வாழ்வோர்க்கு நீயே வுன்றன்
அன்புக்கை நீட்டிடம்மா ஆட்சி செய்ய
அறந்தவரார் வரவேண்டும் அச்சம் இன்றி!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

82. பண்புடைய மாந்தர்மேல் காட்டு கின்ற
பரிவுதனை அறிவோமே அவர்தம் வாழ்வில்
என்றைக்கும் துணைநிற்பாய் எளியோர்க் கென்றும்
ஏற்றங்கள் பலவளிப்பாய் ஏழ்மை நீங்க!

83. உன்னடியே கதியென்றே உன்நா மத்தை
உச்சரித்தே வாழ்வோரை அறிவாய் நீயே
நன்மனத்து மாந்தர்க்கும் நலிந்த வர்க்கும்
நல்வழிகள் காட்டிடுவாய் நல்லோர் வாழ!

84. விதிதனையே மாற்றிடுவாய் அடிய வர்தம்
விழைவுகளை நிறைவேற்றிக் குழப்பம் உள்ளோர்
மதிதன்னைத் தெளிவிப்பாய் நல்ல நல்ல
மாண்புகளை யூட்டிடுவாய் மண்ணே! விண்ணே!

85. அன்பினையே மலர்களாக்கி யுன்னைப் போற்றி
அருந்தவமே புரிந்திடுவோம் அம்மா காளி
என்றைக்கும் நலம்புரிந்தே அன்பு காட்டி
எமையென்றும் வாழவைப்பாய் இன்பம் கூட்டி!

86. பொன்மணிகள் வேண்டுகிலோம் எங்கள் அல்லல்
போக்கிடவே வழியமைப்பாய் யாவ ருக்கும்
அன்புடனே அமுதளிப்பாய் ஏழை யர்தம்
அவலத்தை யகற்றிடுவாய் அன்புத் தாயே!

87. காலையிலே எழுந்ததுமே கனக வள்ளி
கண்களிலே வந்தமர்வாய் அதற்குப் பின்னே
மாலைவேளை வந்தபின்னே இரவு நேரம்
மாகாளி தோன்றிடுவாய்! மனத்தில் நிற்பாய்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

88. மணிபலவு(ம்) அணிந்தவளே அம்மா காளி
மன்றாடி யுனைவேண்டி இங்க ழைப்போம்
பிணிபலவும் நீக்கிடுவாய் வேண்டு வோர்க்குப்
பிள்ளைவரம் ஈந்திடுவாய் பெருமை சேர்த்தே!

89. தூயவுளம் நற்பண்பும் உள்ளோர் உன்னை
துதிசெய்தே அன்புடனே பணிந்து நாடி
நேயமுடன் வேண்டுதல்கள் நன்றி யோடு
நிறைவேற்றி மனம்மகிழ்வார் நின்னைப் போற்றி

90. நீரைப்ப டைத்தவளே நெருப்பும் காற்றும்
நீள்வெளியும் மண்ணும்ப டைத்த தாயே!
பாரிலுள்ள பல்லுயிர்கள் வாழ்வ தற்கே
பரம்பொருளாம் பரமசிவன் பாகம் ஆனாய்!

91. இயற்கைதரு சக்தியெலாம் எழிலாய் எங்கள்
இறைவிதந்த கொடைதானே இங்கி ருக்கும்
செயற்கையான பொருள்களிலே இயற்கை சேரா
செய்பொருளும் உண்டாமோ? தெய்வத் தாயே!

92. உய்பொருள்கள் யாவையுமே படைத்த ளித்த
உலகத்து நாயகியே எதிலு மிங்கே
உயர்ந்ததென்றும் தாழ்ந்ததென்றும் பேத மேதும்
ஒருபோதும் கண்டிலைநீ ஒளிரும் உமையே!

93. பகலிரவு பாராமல் அழைக்கும் போதில்
பறந்தோடி அடியவர்தம் வலியைப் போக்கும்
இகமிதனில் இருக்கின்ற எங்கள் தாயே
எங்கெங்கும் நிறைந்தவளே எந்தாய் நீயே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

94. உடல்நோயோ மனநோயோ பற்றி யுள்ளோர்
உன்னுதவி நாடுகையில் உடனே நீயும்
கடலலைபோல் பாய்ந்துவந்தே உதவ வேண்டும்
கருணையுளம் படைத்தவளே கரும்பின் சாறே!

95. வஞ்சனைகள் செய்தோரும் வருந்தி யுன்றன்
மலரடிகள் பணிந்திட்டால் இரக்க முற்றே
கொஞ்சுமொழி யாலவரின் மனத்தை மாற்றிக்
கோலமுடன் வாழென்பாய் குலவும் குன்றே!

96. நாளுமுன்றன் நற்பெயரை நாங்கள் ஓதின்
நலிவகன்று வளம்சேரும் நன்மை கூடும்
மூளுமெந்த நோயனைத்தும் முடங்கி நீங்கும்
முன்வினையின் பழியொழியும் முற்றும் தாமே!

97. மனதிட்பம் உடல்திட்பம் வினையின் திட்பம்
வளத்தோடு விளங்கிடவே உதவும் தாயே
நனவினிலும் கனவினிலும் தோன்றி எம்மை
மனமுவந்து காக்கின்ற மருந்தும் நீயே!

98. பரிவுடைய பக்தரெலாம் இனிய நல்ல
பண்புடைய மாந்தரெலாம் மற்றும் உள்ள
உருளுகிற உலகில்வாழ் உயிர்க ளெல்லாம்
ஊறின்றி வாழவைப்பாய் உளம்க னிந்தே

99. உன்னழகை உன்புகழை உன்றன் பேற்றை
உள்ளபடி செப்பிடவே ஏற்றச் சொற்கள்
என்னறிவுக் கெட்டவில்லை என்றா லும்நான்
எளியமொழிப் பாமாலை தொடுத்தே யஃதை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

100. உன்பாத மலரடிக்கீழ் வைத்தேன் அம்மா
உன்சக்தி பாடலிலே உறைதல் வேண்டும்
மன்பதையில் எல்லாரும் துன்பம் நீங்கி
வாழ்வதற்கு மந்திரமாய் வாய்க்க வேண்டும்!

101. பொங்கிவரும் கடலும் நீ புனலும் நீயே!
போர்செய்யும் ஆற்றல்நீ பொலிவும் நீயே!
செங்கதிரும் நிலவும்நீ நிழலும் நீயே!
தெளிவுதரும் தெய்வம்நீ! வாழ்க! வாழ்க!

102. காளியம்மா கருணைசேர் கார்மு கில்நீ
காக்கின்ற கயல்விழியே கனியின் சாறே
கோளிழைக்கும் கொடுமையெலாம் கொய்தெ டுத்தே
குணமாக்கும் கூர்மதியே! வாழ்க! வாழ்க!

103. ஓம்காளி ஓம்காளி என்னும் சொல்லே
ஒப்பில்லா மந்திரமாம் உணர்வோம் அம்மா
ஓம் சக்தி ஓம் சக்தி என்னும் சொல்லே
உற்றதிரு மந்திரமாம்! வாழ்க! வாழ்க!

104. நூற்றியெட்டு முறைகளிந்த மந்தி ரத்தை
நுண்ணுணர்வோ டுரைப்பினெந்தத் துயர்நேர்ந் தாலும்
மாற்றிடுவாள் மாகாளி மகிழ்வே சூழ
மன்னுமவள் திருவடிகள் வாழ்க! வாழ்க!

105. அகத்தினுளே அமர்ந்துள்ள அம்மா வாழ்க!
ஆற்றலெலாம் அளிக்கு மெங்கள் ஆத்தா வாழ்க!
இகமிதனில் எமைக்காக்கும் இனியோய் வாழ்க!
ஈசன்றன் பாகத்தின் இறைவி! வாழ்க!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

106. உளத்தினிலே உறைபவளே உமையே வாழ்க!
ஊருக்கும் உலகிற்கும் உரியோய் வாழ்க!
எளியோரை ஏற்றமுறச் செய்வோய்! வாழ்க!
ஏதமில்லா இல்வாழ்வை அளிப்போய் வாழ்க!

107. ஐயமின்றி நம்பியோரை அணைப்போய்! வாழ்க
ஐங்கரன்மேல் அன்புடையோய் அன்னை வாழ்க
ஓய்தலின்றி உலகாளும் உமையே வாழ்க!
ஓமென்னும் உட்பொருட்குள் உறைவோய் வாழ்க!

108. ஔவியம்வந் தணுகாமல் அழிப்போய் வாழ்க!
ஔடதமாய் நோய்நீக்கி அருள்வோய் வாழ்க!
இவ்வுலகில் தோன்றிநலம் புரிவோய் வாழ்க!
இஃதொருநற் றமிழ்மாலை! வாழ்க! ஏற்றே!

நூற் பயன்

காளியம்மன் நூலிதனை ஓதும் மாந்தர்
கருமவினை தீர்த்துமனம் மகிழ்ந்தே வாழ்வார்
நாளுமொரு நல்வினையால் நன்றி கூடும்
நல்லாயுள் நல்வாழ்வும் நிலைக்கும் நீண்டே!

(நேரிசை வெண்பா)

காளியைப் போற்றிக் கனிந்தவள் சீர்மிகு
தாளினைப் பற்றித் தமிழ்மாலை – சூளுரைத்தே
கோலமுறக் கோத்தான் புதுவை பசுபதியான்
காலனையும் வென்றிடலாம் கற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புதுவை முத்துமாரியம்மன்

(மணிகள் பத்து)

(கட்டளைக் கலித்துறை)

1. வங்கக் கடலோர வண்ணப் புதுவையில் வந்துதித்த
எங்கள் துணைமுத்து மாரிப் புகழினை ஏத்திடவே
தங்கச் சிலையே தருவே தளிரே தலைமகளே
பொங்கு முணர்வால் பதிகம் படைத்துள்ளேன் **பொன்மணியே!**

2. அகவை இரண்டு முதலே உனையென் அகத்தினிலே
மகிழ்வாய் இருத்தி மனமாறப் போற்றி வருவதினால்
தகவுடன் நானும் வினைபல வாற்றிட சக்திதந்தாய்
திகழொளி மாரியே தீஞ்சுவை கன்னலே **செம்மணியே!**

3. உன்திருக்கோவில் மணியொளி கேட்டதும் ஓடியங்கே
உன்னெழிற் கோலம் தனைக்கண்டுருகி உவந்திடுவேன்
உன்முகம் காணவே ஊரெலாம் கூடுமே ஊர்வியக்க
உன்றனைத் தாங்கியே ஊர்வலம் செல்வார் **ஒளிமணியே!**

4. முத்தே மணியே முகிலே மழையே முழுமதியே
வித்தே யுயிரே விளையும் பயிரே விரிவுலகின்
சத்தே வலிமை வழங்கி யுதவிடும் தண்ணொளியே
கத்தும் கடலலை பாயும் புதுவையின் **கண்மணியே!**

5. சிரிக்கும் சிலையாய்த் திகழ்கிற மாரியே சீர்குலைந்து
வருத்த முறுவோர் வளம்பெறச் செய்யும் வளர்மதியே
விரித்த குடைபோல் விளங்கி யவரை விருப்புடனே
சிரிக்கும் படியாய் உயர்த்தி மகிழும் **திருமணியே!**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6. வேப்பிலைக் காரியே என்மனத் தேவி வினையறுத்துக்
காப்பது தானுன் கருணை யலவோ கனிமொழியே
போற்றுவே னுன்னையே வெற்றியே நல்குவாய் பொற்கொடியே
தோற்றுத் துயர்கொள லாகுமோ நானினித் **தூமணியே!**

7. மலரினை யொத்த மணமுடை யாளே வடிவழகே
அலர்முகத் தாளே அருள்தரு தாயே அபிராமியே
உலகினை யாளும் உலகத் தரசி உனைத்தவிர
தலைவியாய் யாரையும் ஏற்பனோ? சொல்வாய் **தவமணியே!**

8. காற்றே கனலே புவியே வெளியே கருப்பொருளே
ஊற்றே ஒளியே உலக விளக்கே உமையவளே
கேட்ட தனைத்தும் கொடுத்தே மகிழும் கெழுமையளே
மாட்சிமை கொண்ட மனமுடை யம்மனே **மாமணியே!**

9. மாரியே உன்றன் மகிமையைக் கண்டே மனமுருகிப்
பாரதி உன்னையே பாடினான் போற்றிப் பயனுறவே
வீரமும் வெற்றியும் வேண்டின் தருவாய் விடிவிளக்கே
பாரமே இன்றி மனத்தினைத் தேற்றும் **பருமணியே!**

10. பயமெது மின்றி நலத்தொடு வாழப் பரிவுடனே
புயலெனத் தோன்றி உடல்தனைத் தாக்கும் புன்மைகளைத்
தயவுடன் நீக்கி நலம் பெறச் செய்திடும் தாயுமையே
கயல்விழி கொண்ட கனகாம்பிகையே **கருமணியே!**

(நூற்பயன்)

11. முத்தெனும் மாரியைப் போற்றுமிப் பாடல் முழுவதையும்
எத்துணைத் துன்பம் வரினு(ம்) அதனை எடுத்திசைப்பின்
வெற்றிகள் யாவும் விரைந்துமைச் சேரும் விதிவழியே
பற்றிடும் நோயும் பறந்திடும் தானாய்ப் பனியெனவே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சக்தி கவசம்

சீர்கொள் கருமாரி சக்தி கவசமிதைப்
பார்மிசை யுள்ளோர் படித்தால் – கார் நீங்கி
வேரோடு போகுமாம் வேதனை யாவுமே
சீரோடு வாழ்வார் சிறந்து.

உலகைக் காக்கும் உமையவளை நாளும்
வலமே வருவோம் மகிழ்ந்து.

நெருப்பும் காற்றும் நீருடன் வெளியும்
அருகில் பூமியென் றைந்து பூதமும்
சேர்ந்த சக்தியே தேவியே காளி
ஏந்தினோம் மனதிலுனை இங்கு நீ வருகவே!
வருக வருக வாராகி தாயே
தருக வரங்கள் தர்மங்கள் உய்ய
பாவம் நீங்கிட பாவிகள் தொலைய
காவலாய் இருந்தெமைக் காளியே காக்க!
சிங்கவா கனத்தில் சீரோடு வருக
என்றன் தெய்வமே எழில்நா யகியே!
அழகு முகத்தோடு அருகினில் வருக
ஒழுகும் கருணையொடு ஓடியே வருக
அள்ளி முடித்த ஆறடி கூந்தலில்
மல்லிகைச் சரத்தை மத்தியில் தரித்துச்
செவிக ளிரண்டில் சிவப்புக் காதணி
சிவந்த மூக்கில் செம்மணி மின்னிட
மஞ்சள் முகத்தில் செஞ்சுடர்த் திலகம்
கொஞ்சும் புன்னகை கொவ்வைவாய் சிந்திட
கன்னம் சிவக்க எண்ணம் கொழிக்க
அன்னம் போலசைந்(து) அன்னையே வருக!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கனக மாலை கழுத்தில் தொங்கிட
கலச முலையில் கருணை கசிந்திட
இடையில் சீலை எழிலாய்த் தொங்க
இடுப்பணி ஒளிர இங்கு நீ வருகவே!
தண்டுக் கால்களில் தண்டை யணிந்து
தங்கத் திருமேனி தாங்கியே வருக!
பொற்சிலம் பணிந்து பொலிவொடு
கற்பகாம் பிகையே கடிது நீ வருகவே!

ஓம் ஓம் ஓம் ஓம் ஓங்காரி வருக!
ரீம் ரீம் ரீம் ரீம் ரீங்காரி வருக! (30)
சக்தி ஓம் சக்திஓம் சங்கரி வருக
இத்தரை காத்திடும் இறைவியே வருக!
தகதோம் தகதோம் தகதிமி தகதிமி
தகவுடன் தாளம் தப்பாமல் வருக!
திகதோம் திகதோம் திகதிமி திகதிமி
மகிழ்ந்தெமைக் காக்க மகேசுவரி வருக!
என்னுயிர் காத்திட என்றும் நீ வருக!
என் தலை வைத்துன் எழிலடி பணிவேன்
உடலில் சிறப்பதாம் உறுப்பது சிரசு
தடையின் றதனைத் தயாபரி காக்க! (40)
ஒலிசெவி இரண்டும் ஓங்காரி காக்க!
ஒளிதரு கண்களை உமையவள் காக்க!
நாசிகள் நலமுற நாயகி காக்க!
பேசிடும் வாய்தனைப் பெருமாட்டி காக்க!
நாலெட்டுப் பற்களை நாயகி காக்க!
நாவை நலமுடன் நந்தினி காக்க!
கழுத்தைக் கனிவுடன் கனகவல்லி காக்க!
விழிப்புடன் தொண்டையை விசாலாட்சி காக்க!
சீர்மார்பைச் சிதறாமல் சிவசக்தி காக்க!
பார்போற்ற முதுகைப் பைரவி காக்க! (50)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிடரியை என்றும் பீதாம்பரி காக்க!
திடமுடன் இதயம் இயங்கிட காக்க
பரிவுடன் வயிற்றைப் பரமேசுவரி காக்க!
பருத்த தொடைகளைப் பகவதி காக்க!
கைகால் முட்டி காதம்பரி காக்க!
கைவிரல் கால்விரல் கருமாரி காக்க!
இடையினை எங்கள் ஏகாம்பரி காக்க!
திடமுடன் குருதியைத் திருவே நீ காக்க!
மர்மக் குறிகளை மாதங்கி காக்க!
நரம்பும் எலும்பும் நான்முகி காக்க! (60)
சிறுகுடல் பெருங்குடல் சிவகாமி காக்க!
சிறு நீ ரகத்தைச் செவ்விதழி காக்க!
கல்லீரல் நல்லீரல் காத்தாயி காக்க!
நலமுடன் நாடியை நவசக்தி காக்க!
எரிசரும நோயும் எலும்பின் நோயும்
நரம்பின் நோயும் நச்சுறு நோய்களும்
ஈளை காசம் எப்பிணியி லிருந்தும்
பாளையத் தம்மா பாங்குடன் காக்க!
புற்றுநோய் என்னைப் பற்றாமல் காக்க!
பற்றினால் எங்கும் பரவாமல் காக்க! (70)
வந்தநோய் வளராமல் காக்க
எந்தநோய் வந்தாலும் எளிதினில் போக்கவே!

செந்தேள் பூரான் சிலந்தி அரவம்
நஞ்சுறு யாவும் நாடியே என்னைக்
கொட்டாமல் கொத்தாமல் கொல்லாமல் என்றும்
கட்டாயம் வந்தே காளியே காக்க!
வஞ்சகர் ஏவிடும் வைப்பு, சூனியம்
நஞ்சுடை மந்திரம் நலிவுறு ஏவலும்
சாத்தானின் சேட்டையும் சண்டாளர் சதியும்
வாட்டாமல் என்னை வளர்மதி காக்க!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கால தூதுவன் கயிற்றை வீசுமுன்
ஞால நாயகி நான்முகி காக்க!
சூலத்தை ஏவிடு சுக்கு நூறாக்கு
காலத்தில் வந்து கடும்பகை போக்கு!
பகலிலும் இரவிலும் பார்கவி காக்க!
இருளிலும் ஒளியிலும் இந்துமதி காக்க!
நீரிலும் நிலத்திலும் காக்க
நீள்வெளிக் காற்றிலும் நிரந்தரி காக்கவே!

வாழ்க வாழ்க மாகாளி வாழ்க!
வாழ்க வாழ்க வாகீசுவரி வாழ்க!
எல்லைக்காளி என்றுமே வாழ்க!
எட்டுமா னூர்வாழ் எழிலே வாழ்க!
அம்பகரத் தூர்காளி யம்மையே வாழ்க!
அண்டகத்தைக் காக்கும் அன்னையே வாழ்க!
அதிவீராம் பட்டினம் ஆளும்
மதிமுக செங்கழுநீ(ர்) அம்மா வாழ்கவே!

போற்றி போற்றி பொற்கொடி போற்றி!
போற்றி போற்றி பொன்மணி போற்றி!
சமய புரத்துச் சக்தியே போற்றி!
உமையே உயிரே உறவே போற்றி!
அருட்கட லூர்திகழ் அபிராமி போற்றி!
திருக்காஞ்சி வாழும் திருவே போற்றி!
காசி விசாலாட்சி கண்மணி போற்றி!
மாசிலா மதுரை மீனாட்சி போற்றி!
முத்தே போற்றி! முகிலே போற்றி!
வித்தே போற்றி! விளைவே போற்றி!
சித்தே போற்றி சிவத்தின்
சத்தே போற்றி போற்றி தாயே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முருகா உன்னை வழுத்துவமே!

(கட்டளைக்கலித்துறை)

1. முருகனை வேலனை முத்துக் குமரனை மும்மலங்கள்
இரிப்பானை இன்முக வள்ளிக் கணவனை ஈரறுதோள்
கரங்கள் பனிரண்டுடையானைக் கந்தனை கார்வண்ணனின்
மருகனை எப்போதும் நெஞ்சில் நிறுத்தி மறக்கிலேனே!.

2. முக்கண்ணன் மைந்தன் முருகன் வடிவேலன் முந்திவந்தே
சிக்கல் அறுப்பான் சிவபாலன் யாவர்க்கும் சீர்செய்யவே
எக்கணமும் நெஞ்சில் தங்கும் இறைவன் எழில்குமரன்
தக்கன வெல்லாம் தருவான் அவனடித் தாழ்பவர்க்கே!

3. கன்றென எம்மை வளர்க்கும் தருவே கதிர்வேலவா
உன்றனைப் போற்றி உனதடி தொட்டே உருப்படுவோம்!
குன்றங்கள் ஏறிக் குவலயம் காக்கும் குமரேசனே!
அன்றைக்கும் இன்றைக்கும் என்றைக்கும் நீதான் அடைக்கலமே!

4. மயிலேறி விண்ணில் வலம் வரும் வேலவா மால்மருகா!
கயல்விழி வள்ளிக் கணவா முருகா கருணையினால்
உயிர்போக்கும் சூரரை வென்றே யொழித்த உமைமைந்தனே!
மயலுற்று மாறும் மனந்தன்னை வெல்லும் மதி வேண்டுமே!

5. தந்தைக்கே போதனை செய்திட்ட எங்கள் தவமணியே!
எந்தைக்கும் எந்தாய்க்கும் ஈடானாய் மேலானாய் என்னரசே!
சிந்தைக்கும் தேனானாய் சீரெல்லாம் நீயானாய் செஞ்சுடரே!
புந்திக்குள் வைத்துன்னைப் போற்றுவோம் நாளும் பொலிவுடனே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6. கண்வழி வந்தோன் கலிதீர்க்க வல்லோன் கடம்பனிவன்!
வன்முறை போக்கிட வந்தவன் அன்றோ வடிவேலவன்!
இன்பமே ஈவான் இடர்கள் களைவான் இளமுருகன்!
ஒன்றி அவனைத் தொழுதே மகிழ்வோம் உயர்ந்திடவே!

7. வெள்ளி மலைமீதே ஈசன் துணையுடன் வீற்றிருக்க
வள்ளிதே வானை இருவரும் பக்கம் மகிழ்ந்திருக்க
புள்ளி மயில்மேல் உலகையே சுற்றிடும் புண்ணியனே!
துள்ளியே வந்தெங்கும் துக்கத்தைப் போக்கிடும் தூயவனே!

8. உள்ளத்தில் ஓங்கியே நிற்கும் உமைபாலா ஓடிவந்தே
பள்ளத்தில் வீழாமல் பார்த்துக்கொள் எம்மைப் பயந்தெளிய
தெள்ளத் தெளிந்த மதியுடன் தேக்கொத்த தின்மனமும்
அள்ளித் தருவாய் ஆறுமுகா கேட்ட அனைத்தையுமே!

9. நெஞ்சை அகலாத நேர்மை விளங்கிட நீயருள்வாய்!
வஞ்சனை தோன்றிடா வாழ்வினை நல்கி வளமருள்வாய்!
பஞ்சினை யொத்த மனந்தனை ஈந்தே பயனளிப்பாய்
கொஞ்சிடும் வள்ளிக் கணவா! அணையாக் குலவிளக்கே!

10. சிந்தனை செய்தே சிறப்புடன் வாழத் திறமளிப்பாய்!
எந்தையே நாங்கள் இடரற உய்ய இதமளிப்பாய்!
நன்மையே செய்திடும் நன்மனம் ஈந்தே நலமளிப்பாய்!
வந்தெமை வாட்டிடும் வன்பிணி போக்குவாய் வாழ்வளித்தே!

11. மன்னா முருகா மணிமார்பா! நின்னை வழுத்துவமே!
மங்கா ஒளியே மயிலோனே நின்னை வழுத்துவமே!
வந்தே உதவிடும் வள்ளலே நின்னை வழுத்துவமே!
வஞ்சிக் குறத்தி மகிழ்நனே நின்னை வழுத்துவமே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முருகன் திருப்பள்ளியெழுச்சி

சின்னதொரு வயதினிலே சுற்றிவந்த போதே
சீர்மையெலாம் செப்பியுனைச் சிந்தைபுக வைத்தே
என்னுடைய தந்தையுனை ஏத்திட வைத்தாரே
ஏறுமயிலேறி வரும் எழிலுடைய தேவே
அன்பு வழி காட்டியெனை அமைதியுறச் செய்தே
அனுதினமும் நெஞ்சினிலே அமர்ந்தருளும் கோவே
இன்னலெலாம் களைந்தருளும் இறையருளும் நீயே
என்னுயிரே திருப்பள்ளி எழுந்தருளுவாயே! (1)

மாறுபடு சூரரெலாம் மாய்ந்தொழியச் செய்தே
மன்னு புகழ் கொண்டு மனம் மகிழ்ந்திட வைத்தாயே
வீறுடைய வேலுடைய விண்ணுலக வேந்தே
விந்தையுறு தோளுடைய கந்தபெரு மானே
ஆறுமுகம் ஆறிருகை அமைந்த முருகோனே
அனுதினமும் நெஞ்சினிலே அமர்ந்தருளும் கோவே
ஏறு மயில் வாகனனே எந்தையும் நீ தானே
என்னுயிரே திருப்பள்ளி எழுந்தருளு வாயே! (2)

செஞ்சடையன் திருமகனே செல்வ குமரேசா
சேர்ந்ததிரு வள்ளியம்மை சிந்தையுறைவோனே
கொஞ்சு மொழி தேவ மகள் கொழுநனும் நீதானே
கோலமயி லேறிவரும் கொற்றவனும் நீயே
அஞ்சுகிற போதிலெனை ஆண்டருளு வோனே
அனுதினமும் நெஞ்சினிலே அமர்ந்தருளும் கோவே
எஞ்சியுள வாழ்வுதனில் எந்தனைக் காப்பாயே
என்னுயிரே திருப்பள்ளி எழுந்தருளுவாயே! (3)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முந்தையொரு நாளினிலே மூர்க்கரெலாம் மாய
மூண்ட பெரும் போரினிலே வெற்றியைக் கொண்டாயே
கந்தனென பெயருடைய கார்த்திகை மாமணியே
காடுமலை எங்கணுமே காட்சி தருவோனே
அந்தமிகு பார்வதியின் அன்புமகன் நீயே
அனுதினமும் நெஞ்சினிலே அமர்ந்தருளும் கோவே
எந்தவொரு செய்கையிலும் ஏற்றமளிப்போனே
என்னுயிரே திருப்பள்ளி எழுந்தருளுவாயே! (4)

தேசுடைய தென்புலத்துத் தெய்வமகன் நீயே
தெள்ளுதமிழ் தலைவனெனத் திகழ்ந்து வருவோனே
மாசில்லா மாண்புதரும் மன்னவனும் நீயே
மந்திரமாய் மனதினிலே மண்டுகிற தேனே
ஆசையெனும் அழுக்கைஅற வேயொழிக்கும் வேலே
அனுதினமும் நெஞ்சினிலே அமர்ந்தருளும் கோவே
ஈசனுடை நேச மகன் எங்குமிருப் போனே
என்னுயிரே திருப்பள்ளி எழுந்தருளு வாயே! (5)

பழமுதிருஞ் சோலையனே பழனிமலை யானே
பக்தரெலாம் வருசெந்தூர் திருத்தணிகை வேலே
கழனி நிறை வயலூரில் காத்தருளுங் கோவே
கையினில்செவ் வேலுடைய கந்தகுரு நீயே
அழகுடைய பரங்குன்றின் அன்புநீ ரூற்றே
அனுதினமும் நெஞ்சினிலே அமர்ந்தருளும் கோவே
எழிலுடைய சுவாமிமலை எழுந்தபெரு மானே
என்னுயிரே திருப்பள்ளி எழுந்தருளு வாயே! (6)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேலனுக்கொரு வெண்பாவந்தாதி

(காப்பு)

எந்நாளு மென்நெஞ்சி(ல்) ஏறிவிளை யாடுகிற
கந்தன்றன் சீரைக் கருதினேன் – அந்தாதி
பத்தெழுத வைப்பாய்; பகர்வாய் பதமெலாம்
முத்துகன நாதா முகிழ்ந்து.

தாவென்று கேட்பதெலாம் தந்தருளும் தற்பரனே
பூவென்று நெஞ்சில் புகுந்தவனே – காவென்று
வேண்டினேன் வெற்றிவடி வேலனே சண்முகா
ஈண்டெனுக் கீந்தனை இன்பு. (1)

இன்பமும் துன்பமும் ஈந்து நலம் செய்பவனே
தென்பழனிக் குன்றின் திருமகனே – நின்பதம்
ஒன்றே துணையென உய்கின்றேன் நீ இங்கே
இன்றே வருவாய் இசைந்து. (2)

இசைந்தே மனமுருகி இன்னல் களைந்த
வசையிலா வாழ்வளிக்கும் வாழ்வே – திசையெட்டும்
நின்புக ழோங்குதே நின்னடிமை நானன்றோ
கன்றெனைக் காப்பாய் கசிந்து. (3)

கசிந்தே யுருகிக் கருணையுங் காட்டி
உசித மளித்திடுக ஊற்றே – நசிந்துயான்
போகாமல் காவெனஉன் பொற்கழலை வேண்டினேன்
ஏகா திருந்திடுவாய் ஏற்று. (4)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏற்று தொழுவேன் இமியும் மறக்கிலேன்
குன்றில் குலவும் குமரேசா – இன்றெனை
வல்லமை பெற்றே வளமுறச் செய்தனை
சொல்வள மீவாய் சுவைத்து. (5)

சுவைக்கச் சுவைக்கச் சுகந்தரும் கோவே
அழைக்க அழைக்க அருள்வாய் – பிழைக்க
வழிபல காட்டி வளம்பல சேர்ப்பாய்
பழியெதும் பற்றாமல் பார். (6)

பார்க்க விழைகிறேன் பன்னிரு கையனைத்
தீர்க்க வருவையே தீவினைகள் – மூர்க்க
குணமெலாந் தோன்றா தொருவனாய் வாழக்
கணமும் மறவாமல் கா. (7)

காத்தே கரை சேர்ப்பான் கார்த்திகேயன் கந்தனின்
பூத்த திருமுகத்தைப் பொன்நிறத்தைப் – பார்த்தே
வணங்குவோம் வள்ளிம ணாளனே வாழ்வே
இணங்கியே இங்கு நீ வா! (8)

வாவென் றழைத்ததும் வந்திடுவான் மஞ்ஞைமேல்
தீதென் றறியத் தெளிவிப்பான் – தாவென்று
கேட்பவை யாவையும் கேடின் றருளுவான்
வேட்கை தணிப்பான் விரைந்து (9)

விரைந்து பரிவோடு வேலவா வா வா
கரைந்தே மனமுருகிக் காப்பாய் – வரைஇல்
புகழெலாம் தந்தெமைப் பூரிக்கச் செய்வாய்
இகந்தரு துன்பகல வென்று (10)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எல்லாம் "அவன்" செயல்

(என்சீர் மண்டிலம்)

1. தீராத வன்புடைய சீருள் பெற்றோர்
திகழ்ந்திட்ட குடும்பத்தில் தோன்றச் செய்தாய்
ஊராரும் உறவினரும் போற்றும் வண்ணம்
ஒழுக்கமுடன் வளர்ந்துயர வுதவி செய்தாய்
கூரான வரிவாற்றல் கொடுதத போதும்
கூர்தீட்ட மறந்துவிடும் குறையும் வைத்தாய்
போராடும் வாழக்கையிலும் பொறுமை யீந்தாய்
பொல்வாங்கு புரியாத பொற்பும் தந்தாய்!

2. சீரான கல்விதனைக் கற்க வைத்தாய்
சிலகலைக ளென்னிடமும் திகழச் செய்தாய்
நேரான வழிதன்னில் செல்வம் ஈட்ட
நேர்மையொடு அரசுபணி ஏற்கச் செய்தாய்
ஏராளம் நீசெய்த நன்மை எல்லாம்
எதைச்சொல்வேன் எதைவிடுவேன் நீயே சொல்வாய்
பாராளு மிறைவாநான் பகர்வ தெல்லாம்
பட்டசில அனுபவமென் றறிவாய் நீயும்.

3. மாறாத பற்றுடைய மனைவி தந்தாய்
மாண்புள்ள மக்களையும் பெறவே செய்தாய்
வேறான மனைவிழையா மேன்மை தந்தாய்
மெய்யான மனைமாட்சி மிளிரச் செய்தாய்
ஊறேதும் நினையாத வுள்ள மீந்தாய்
ஊர்மக்கள் போற்றிடவே புகழும் தந்தாய்
கூறாமல் விடுவேனோ உன்ற னன்பை
குறையில்லா வாழ்வளிக்கும் உன்றன் பண்பை?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. ஓடாம லொதுங்காம லுனையே பற்றி
உன்பெயரை யுச்சரித்தே யுய்யச் செய்தாய்
பாடாம லிருந்தவெனைப் பாட வைத்தாய்
பாடிமிக வின்பமுறப் பாக்கள் தந்தாய்
தேடாம லிருந்தவெனைத் தேட வைத்தாய்
தேடியுனை யுணர்கின்ற திறனும் தந்தாய்
வாடாம லெனைக்காக்கும் வள்ளல் நீயே
வாழ்வளிக்கு முனையென்றும் மறபப்பே னோநான்?

5. நாடாமல் நான்விட் டத் தமிழை நன்றாய்
நான் கற்றுப் பாவெழுது மாற்றல் தந்தாய்
கூடாம லிருந்தநற் றமிழ்ச்சு வையை
கூட்டியென்றன் நெஞ்சினையே குளிர வைத்தாய்
கோடானு கோடி பணம் கொடுத்தா லும்நான்
கொள்வேனோ தமிழ்ப்பாக்கள் புனையு மின்பம்?
தேடாம லெதுகைமோனை வந்தே சேரும்
தேனாகப் பாடல்கள் நெஞ்சி லூறும்.

6. தானாக மேலோங்கும் காமம் தன்னைத்
தணிக்காமல் தொடர்ந்ததனில் திளைக்க வைத்தாய்
வீணாக வீரியத்தை விரையம் செய்த
வினையாலே வீறிழந்து நிற்க வைத்தாய்
ஏனோநா னிப்பிறவி யெடுத்தே னென்று
எல்லோரும் சொல்வதைநான் ஏற்க மாட்டேன்
காணாத பேரின்பம் காண்பே னுன்றன்
கழலடியே கதியென்று கிடப்பேன் நானே

7. யார்யாரோ எனைக்கெடுக்க முயன்ற போதும்
யாருக்கும் பணியாத வுறுதி தந்தாய்
ஓராயி ரம்விழைவு தோன்றி னாலும்
ஒழுக்கமுட னேயென்னை இருக்கச் செய்தாய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நேரான பாதையிலே நடக்கச் செய்தான்
நிலைகுலையும் போதெல்லாம் நிமிர வைத்தாய்
வாராதோ எவர்க்கும்தான் சோத னைகள்
வந்தனவே எனக்கும்தான் வேத னைகள்!

8. கேளாயோ என்குறைகள் கேட்கா விட்டால்
கேடுதனைக் களைவார்யார் புகல்வாய் நீயே!
மூளாதோ என்னிடரும் மும்ம டங்காய்
முன்வந்து நீயென்னைக் காவா விட்டால்
தாளேன்நா(ன்) இனிமேலும் தொடரும் துன்பம்
தடுத்திடுவாய் தணித்திடுவாய் தாக்கும் நோயை
நாளாக நாளாக நலிகின் றேனே
நல்வாழ்வு தாராயோ நலமே செய்தே!

9. வீணாகக் கதைக்கின்றே னென்றெண் ணாதே
விதிப்படிதா னாகுமென விளம்பா தேநீ
காணாமல் போனதோநின் கனகக் கைவேல்?
கலக்கமுறும் போதெல்லாம் காக்கு மவ்வேல்!
காணாமல் போனதோநின் மயிலும் சொல்வாய்!
காக்கவதன் மீதேறி வருவா யன்றோ!
கூனாகக் குருடாகப் பிறவா நானும்
கூடிவரும் நோய்களினால் குமுறு கின்றேன்.

10. நீராகி நிலமாகி நெருப்பு மாகி
நீள்வான வெளியாகி வளியுமாகி
வேராகி யுயிர்க்கெல்லாம் விளங்கும் கோவே!
விண்ணுலகும் மண்ணுலகும் போற்றும் தேவே!
பாராயோ என்நிலையை? பார்த்துங் கூட
பாராம லிருப்பதுபோ லிருக்க லாமோ?
தாராயோ நல்வாழ்வு தாரா விட்டால்
தவிக்கும்நா னென்செய்வேன் கனிந்தே காப்பாய்!

(குறிப்பு : இப்பாடலில் ஒவ்வொரு அடியின் முதல் இரண்டெழுத்துக்களும் நெடிலாகவே அமைந்துள்ளதை நுனித்துணர்ந்து மகிழ்க)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வணங்கியே போற்றுவோம்

(சிந்து)

1. என்றன்ம னத்தினிலே – முருகன்
என்றும்நி லைத்திருப்பான் – அவன்
விண்ணிலி ருந்துகொண்டே – என்னிரு
கண்களி லேதோன்றுவான்!
முருகன்... முருகன்... முருகன்!

2. தங்கத்தி ருமேனியன் – முருகன்
திங்களி னொளியழகன் – அவன்
கங்கைந திதலைமேல் – வைத்த
எங்கள்சி வன்மகனாம்!
முருகன்... முருகன்... முருகன்!

3. நல்லவர் யாவரையும் – முருகன்
வல்லவ ராக்கிடுவான் – அவன்
புல்லரை யேயொழித்தே – இந்தப்
பூமியைக் காத்திடுவான்!
முருகன்... முருகன்... முருகன்!

4. துன்பங்கள் நீக்கிடுவான் – முருகன்
தொல்லைகள் போக்கிடுவான்– நாம்
பண்ணும்வி னைகளெலாம் – நன்கு
பயனுறச் செய்திடுவான்!
முருகன்... முருகன்... முருகன்!

5. விழுப்பமு றச்செய்வான் – முருகன்
விழிப்புட னிருக்கவென்பான் – அவன்
வழுக்களில் லாவகையில் – நம்மை
உழைத்துமுன் னேறச்சொல்வான்!
முருகன்... முருகன்... முருகன்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6. வண்ணம யில்மீதில் – முருகன்
வந்தேய ருள்புரிவான் – அவன்
சிந்தும்சி ரிப்பினிலே – தேனை
முந்துமி னிப்பிருக்கும்!
முருகன்... முருகன்... முருகன்!

7. வள்ளியு டன்வருவான் – தெய்வ
யானையு டன்வருவான் – அவன்
புள்ளிம யிலேறியே – வந்து
கொள்ளையின் பம்தருவான்!
முருகன்... முருகன்... முருகன்!

8. வேலுட னேவருவான் – முருகன்
வேண்டிய தைத்தருவான் – அவன்
பாலக னாய் வருவான் –வந்தே
கோலமு றச்சிரிப்பான்!
முருகன்... முருகன்... முருகன்!

9. ஏழைக ளைக்காப்பான் – முருகன்
ஏற்றம்ப லதருவான்– அவன்
வாழைய டிவாழையாய்– நாம்
வாழவ ழிவகுப்பான்!
முருகன்... முருகன்... முருகன்!

10. வெள்ளிம லைத்தலைவன் – கொண்ட
வேல்விழி சக்திமகன் – எங்கள்
வல்லமு ருகனடி – தொட்டு
வணங்கியே போற்றுவமே!
முருகன்... முருகன்... முருகன்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எனதுளம் புகுவாயே!

(சந்தம்)

1. நித்தம் திரு முத்துக் குமரனைச்
சக்திக் கொரு வித்துப் புதல்வனைச்
சித்திக் கொடு புத்திக் கொடுவெனப் – புகல்வேனே!

2. கத்துங்கடல் தெற்குக் கரைதனில்
பக்தர் வரு சித்துக் குடிதனில்
சிக்கல் அறு முத்துக் குமரனைப் – பணிவேனே!

3. சித்தர் மலை பக்திப் பழனியில்
நெற்றித் திரு நீற்றின் அழகினில்
வெற்றா முடல் வட்டுத் துணியணி – வடிவேலே!

4. முற்றும் மணப் பற்றும் அறுபட
முத்திப் பெற மூன்றில் விடுபடக்
கற்றுக்கொடு வித்தைப் பல பல – கதிர்வேலே!

5. அஞ்சும் படி வஞ்சம் வருமெனில்
தஞ்சம் புக கொஞ்சம் அருள்புரி
நெஞ்சம் நிறை அன்பும் ஒழுகிடும் – அழகோனே!

6. கொஞ்சும் மொழி வள்ளி ஒருபுறம்
வஞ்சிக் கொடி ஆனை மறுபுறம்
மிஞ்சும் ஒளி வீச எனதுளம் – புகுவாயே!

7. தொக்குத் தொகு தொக்குத் தொகு தொகு
திக்குத் திகு திக்குத் திகு திகு
மிக்குப் புகழ் பெற்றுத் திகழறு – பெருமாளே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாழ்த்து

(பின் முடுகு நேரிசை வெண்பா)

இறைவனைப் போற்றியே இன்ப மடைதல்
குறைவிலா வாழ்வெனக் கொள்வாய் – நிறைவாய்
மறைபலவு மோதி மகி(ழ்)வுபெற லாகி
இறையுண(ர்)வு மேவி இரு!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆசிரியரின் பிற நூல்கள்

1. **அருள் முருகும் அம்பிகையும் - 1990**
(64 பக்கங்கள்) - பக்தி இசைப் பாடல்கள்

2. **எண்ணங்கள் தீட்டிய வண்ணங்கள் - 1999**
(227 பக்கங்கள்) - உரூ. 45-00

3. **பண்ணையில் விளைந்த பயிர்கள் - 2005**
(204 பக்கங்கள்) - உரூ. 50.00

4. **உள்ளத்தில் ஊறும் உணர்வுகள் - 2008**
(226 பக்கங்கள்) உரூ. 60.00

நூல் கிடைக்குமிடம்

எண் 7, சத்தியா நகர் (மேற்கு),
காமராசர் சாலை,
புதுச்சேரி - 605 013.
(தொ.பெ. 0413 - 2248147)
கை. பே. 9500609361

In Public domain. Digitization Muthulakshmi Research Academy